ஸ்திரீகளுக்கு, தங்கள் கோரிக்கையின்படி, சகல ஸம்பத்
தும் கொடுக்கும்படியான விரதம் சித்திரகுப்த விரதம் என
ஒன்றுண்டு. அதை, சித்திரை மாதத்தில் செய்யவேண்டி
யது. இந்த சித்திராபுத்திரர், மிக விவேகமுள்ளவர். அவர்
எப்போதும் எமதருமராஜனிடத்தில் இருந்துகொண்டு
ஜனங்களுடைய புண்ணிய பாவங்களை, தன் ஓலைப் புஸ்த
கத்திலெழுதி அக்கணக்கை எமனுக்குத்தெரிவித்துக்கொண்
டிருப்பவர். ஆகையால், அவருடைய தயவை ஸம்பாதிப்ப
தற்காகவேண்டி, சித்திரகுப்த விரதம் செய்யவேண்டும்.
இது மிக அவசியமான விரதம், இதைக்குறித்து ஒரு இதி
ஹாஸ கதை சொல்லுகிறேன் கேளுங்கள். ஒரு காலத்
தில், குமாரசுவாமி மிக வணக்கத்தோடு, தன் கைகளைக்
கூப்பிக்கொண்டு, கைலாஸத்தின் உசசியில், இரத்தின சிம்
ஹாஸனத்தில் வீற்றிருந்த சங்கரரை நோக்கி: 'ஓ பிதா!
மனுஷ்யலோகத்தில் மானிடர்கள், காமக்குரோத லோப
மோஹ மதமாத்ஸரியங்களால் பீடிக்கப்பட்டும், வருமை
யாலும் மிகவருந்தி வியசனத்திலும், பாவத்தொழில்களை
செய்துகொண்டிருப்பார்கள் ஆகையால், அவர்களைப்
படி எமபாதை அடையாமலிருப்பார்களோ, அப்பேர்க்
கொத்த விரதம் ஒன்று உலகத்தின் க்ஷேமத்திற்காக
அனுக்கிரகிக்க வேண்டு'மென்று குமாரன் கேட்க்கவே,
மஹாதேவன் தன் புத்திரனை நோக்கிச சொல்லுகிறார்:
ஓ குழந்தாய், பழமையான ஒரு இதிகாச கதையை
விவரித்துச் சொல்லுகிறேன் கேள். க்விஜவர்யரென்கிற
ஒரு பிராமணர் இருந்தார்; அந்த பிராமணர், மிக படித்
தவரா யிருந்தாலும், தன் குலாசாரத் தர்மங்களை விட்டு,

அனுஷ்டானங்களையும், சாஸ்திர முறைகளையும் தவிராத்து, வேதங்களையும், புராணங்களையும் தூஷித்துக்கொண்டு, பாப காரியங்களையே செய்துகொண்டு வந்தார். தவிர பரான்னம் சாப்பிடுவார். தான் ஒரு காசாவது செலவழியார். ஒரு தானதர்மம் கொடார். ஆகிலும், அந்த பிராமணர் போஜனம் செய்வதற்கு முன் சித்தராயநமஃ, சித்திரகுப்தாய நமஃ, எமரூபிதராய நமஃ என்று சொல்லிக்கொண்டே, சித்திரகுப்தனுக்கு தான் சாப்பிடுவதற்கு முன்னே பலி போடுவார். அவருடைய பாரியாளுக்கு, சோமா என்று பெயர். அவரும், மிகப் பொல்லாதவர். அவர் தன் கணவனுடைய பேச்சைச் கேளார், சொன்ன வேலையை செய்யார், மாமி மாமனை பிரதினம் தூஷித்துத்திட்டிக்கொண்டே யிருப்பார். அவர் கொஞ்சமாவது எந்த காலத்திலும் புண்ணியம் செய்யாமல் எப்போதும் பாவங்களையே செய்து வந்தவரானபடியினாலும், அந்த பிராமணர் ஒரு காலத்தில் தன் பாபாளை, சமீபத்தில் வைத்துக்கொண்டு, இந்த சித்திரகுப்த விரதம் செய்தாராகையால், அவருக்கும் அந்தப் பலன் கிடைத்தது. அவர்களிப்படி சிலகாலம் பூலோகத்திலிருந்து, பிறகு மரித்தார்கள். அப்போது எமதூதர் வந்து அவர்களை எமனிடம் அழைத்துக்கொண்டுபோய், ஐயா இவர்களைப்போதும் பாபிகளை, ஒரு காலத்திலாவது புண்ணியமென்கிற விஷயத்தையே செய்து அறியாதவர்களென்று, எமரோடு தெரிவித்தார்கள். அப்போது எமன், சித்திரகுப்தனை அழைத்து: இரண்டு பேருடைய பாபபுண்ணிய கணக்கை கண்டு தெரிவிக்கவேண்டியதென அவனுக்குக் கட்டளையிட்டார். உடனே, சித்திராபுத்திரன் தன் கணக்குப் புஸ்தகத்தை அவிழ்த்து ஒவ்வொரு ஏட்டையும் பார்த்து, தங்க

ருக்கு அவர்கள நித்தியமளிக்கும் பலிகளை விரதததில் பார்த்து: ருபகத்துக்குக் கொண்டுவந்து, தலையை யசைத்து, எமதர்மருக்கு தெண்டனிட்டுச் சொன்னர், 'ஓ! பிரபூ, இந்த பிராமணருடைய புண்ணிய பாவங்களைப்பற்றி நாம ஆலோசனை செய்யவேண்டியதா யிருக்கிறது. இவா ருடைய கணக்கில் எங்கே பார்த்தாலும், பாவத்தை பற் றியே யிருக்கிறது. ஓரிடத்திலாவது, கொஞ்சமேனும் புண் ணியத்தைப்பற்றி எழுதினதாய்க் காணப்படவில்லை. ஆகி லும், இவாகளுடைய பாபங்கள் யாவையும பூஜ்ஜியமாக எழுதி இருக்கிறது; அது எனக்கு காரணம்தெரியவில்லை. ஆகையால, அதை நான் அறியாமலிருந்த போதிலும என்னை க்ஷமிக்குமபடி கோருகிறேன்' என்று சொல்லி சித்திரகுப்தன் பேசாமலிருந்தான். எமதர்மன், அவர் புண்ணிய விசேஷத்தை ஆலோசித்துத் தெரிந்துகொண்டு: அவர்களை வைகுண்டத்திற்கு அனுப்பினர்.

ஓ குமாரா! இந்த விரத மகிமை சொல்ல என்னால முடியாது; உலகதில் மனிதர்கள் இந்த விரதம் தவிர மீதி விரதங்களைத்தான செய்தபோதிலும், அவாகளுக்கு ஸ்வர்க்கலோக பிராபதி உண்டோ இல்லையோ வென்று சந் தேகிக்க வேண்டியதா யிருக்கிறது. ஓ ஷண்முகனே, இதற்காக ஒரு இதிஹாஸ கிளைக்கதை சொல்லுகிறேன கேள், அதனால் உன் மனதிலுண்டான சந்தேகங்கள் நீங் கும். ஒரு பட்டணத்தில், அநேக சாஸ்திரங்களைப்படித்த கேசவனென்கிற ஒரு பிராம்மணா உண்டு. அவர் பாரியை யின் பெயர் சுசீலை. அந்தம்மாள் பதிபக்தியோடு புத்திர பௌத்திர ஸம்பத்துடன் கூடினவளாய், அனேக விரதங்க ளைக் கெய்துக்கொண்டு, அனேக யாகபலன்களை அடைந் தக் கொண்டிருந்தாள. ஒருநாள் சுசீலை ஜ்வரத்தினால்

பீடிக்கப்பட்டு, திடீரென்று மரணமடைந்தாள். அவளை எமதூதர்கள் எமனிடத்திற்கு அழைத்துக் கொண்டுபோய், ஐயா, இந்தம்மாளை நாங்கள் மிக பிரயாசத்துடன் பிடித்துக் கொண்டுவந்தோம் என்று அறிவித்தார்கள். உடனே எமன் அந்த ஸுசீலையை சுவர்க்க வாசற்படி மூடி இருக்கிறது, பாபிகளிருக்கு மிடத்திற்கு கொண்டு போவென்று உத்திரவு செய்தார். உடனே சுசீல 'எமதர்மராஜனே! நான் விடாமல் எப்போதும் பதிபக்தியுடன் அவருக்கு பணிவிடைகள் செய்துக் கொண்டு, நோன்புகள் நூற்று காலம் கழித்து வந்தும், என்னை ஏன் தயவின்றி பாபிகளிருக்குமிடம் அனுப்ப நினைத்தாய்' இது நியாயம் தானை வென்று கேழ்க்க, எமன் சுசீலையைப் பார்த்து, ஓ ஸ்திரீயே, நீ சொன்னதெல்லாம் உண்மையே, ஆகிலும் நீ சித்திரகுப்த விரதம் செய்யவில்லை. ஆகையால், என் தூதாள் உன்னை எமபுரத்துக்குக் கொண்டு வந்தார்கள் என்று சொல்ல, அப்போது சுசீல, எமனை நோக்கி: அந்த விரதம் செய்தாலென்ன பலன்? எப்படி செய்யவேண்டியது? எந்த தேவதையை பூஜைசெய்யவேண்டியது? அதை விபரமாகச் சொலலுமென்று கேழ்க்க, எமன் அந்த சுசீல யம்மாளுக்கு சொல்லுகிறார்: 'ஓ சுசீலா, சித்திரை மாதத்தில், சுக்கில பக்ஷத்தில் அல்லது (பூர்வ பக்ஷத்தில்) சப்தமி தினத்தில் சூரியன் மேஷ ராசியில் பிரவேசித்திருக்கும் போது, உதயத்தில் எழுந்து, சுத்தமான சீதல ஜலத்தில் ஸ்நானம்செய்து, நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, தன் வீட்டின் கிழக்கு திக்கில், மெழுகிக் கோலமிட்டு, எமன், சித்திரகுப்தன், சூரிய நாராயணன் இம்மூன்று தேவதைகளையும் பொன்னால் செய்து எமாய சோமம், ஸசித்திரசித்திரம், ஆகிருஷ்ணனராஜஸா என்று

சொல்லும் மந்திரங்களோடு வரிசைப்படி ஆவாஹனம் செய்து, சோடசோபசார பூஜைகள் அந்த பிரதிமைகளின் மீது பூஜை செய்து, பிறகு இதேமாதிரி ஒவ்வொரு மாதத்திலும் பூஜைகள் செய்து, அந்தந்த மந்திரங்களால் அர்க்கியங்கள் விடவேண்டியது. இப்படி பனிரெண்டு மாதமும் செய்துவரவேண்டியது. விரத ஆரம்பத்திலாவது, மத்தியிலாவது, முடிவிலாவது, (உத்தியாபனை) வீரபூர்த்தி செய்யவேண்டியது. உத்தியாபனை செய்வதற்கு முந்தினஞள், ஷஷ்டிதிதி தினத்தில் உபவாஸமாயிருந்து, ராத்திரி கலசஸ்தாபனம் செய்யவேண்டியது.

முதலில், கணபதி பூஜையும், பிறகு புண்ணியாஹவாசனம் செய்து, மண்டபம் ஏற்படுத்தி, இலையின்மீது ஐந்து பரக்கால் அரிசி கொட்டி, அதில் அஷ்டதன பத்மமெழுதி, அதின்மீது கல்ல காம்பிரபாத்திரங்களால் ஐந்து கலசங்கள் வைத்து, அந்த கலசங்களின்மீது புதிய வஸ்திரங்கள் வைத்து அலங்கரித்து, அதில் பிரம்ஹாதி பஞ்சபாலிக்கைகளையும், இந்திராதி அஷ்டதிக் பாலகர்களையும் பிரம்ஹாவாஹனம் செய்து, பிறகு மத்தியில் எமன், எமனுடைய வலது பக்கத்தில் சித்திரகுப்தனையும், இடது பக்கத்தில் சூரியனையும் ஆவாஹனம் செய்து எமனுக்கு சிவப்பு வஸ்திரம் காலு புஜங்களுடன் கையில் தண்டாயுதமும் தரித்தாப்போல் ஆவாஹனம் செய்யவேண்டியது. அந்தந்த தேவதையினுடைய மந்திரத்தால் சாஸ்திரவிதிப்படி பூஜை செய்ய வேண்டியது. சித்திரகுப்தன் பக்கத்தில வெள்ளியால் ஓலையும், பொன் எழுதாணியும் வைத்து அவரையும் பூஜை செய்யவேண்டியது. மூன்று மரக்கால் நெல்லு கூடையில் கொட்டி, அந்தக் கூடைகளின்மீது புது வஸ்திரங்கள் விரித்துப்போட்டு, ஸ்ரீ சித்திரகுப்த, சூர்ய நாராய

யண பிரதிமைகளை வைத்து, ராததிரி காலுஜாமமும் பூஜை செய்துக்கொண்டு ஜாகரணம் செய்யவேண்டியது. சப்தமி அன்று காலையிலெழுந்து ஸ்நாந சித்தியாலுஷ்டானங்கள் முடித்துக்கொண்டு, சக்திக்குத்தக்கபடி பூஜைசெய்து, பிராமணாளை வருணம் கொடுத்து ஏற்படுத்திக் கொண்டு க்ஷீரதர் பணம் (பாலிலல்) தர்ப்பணுதிகள 108-தடவை சமுத்து, நெய், செரு, அல்லது சத்துமாவைக் கொண்டு ஹோமம் செய்துவைத்து, ஜயாதி-பூரணாஹுதி செய்துவைக்கவேண்டும். சிவப்பு சந்தனம் (அகரு சந்தனம்) சிவப்பு அக்ஷதை, சிவப்பு புஷ்பம் இவைகளுடன் பூஜை செய்யவேண்டும். பிறகு கோதானாதி தசதானங்கள், சோடச மஹா தானங்கள செய்யவேண்டியது. முன்னே பூஜை செய்த பிரதிமைகளையும், பிராம்மணர்களுக்கு தானம் செய்யவேண்டியது. வேத சாஸ்திரங்கள் படித்த பிராம்மண வைதீகர்களுக்கு, 30-பேருக்கு குறையாமல் ஷட்சுரஸோபேதமாய் அறுசுவை அன்னபிரதானம் செய்யவேண்டும். தானியங்களுடன் அந்தவஸ்திரங்கள் முதலியன விரதம் நடதினை உபாததியாபருக்கு தானம் செய்யவேண்டியது. இந்த விரதம் விதியுடன் நடத்துகிறவர்களுக்கு, சுவர்க்கலோகம் உண்டாகும், நரகம் கிடையாது. ஓ சுசீலா, நீ பூலோகத்திற்குப்போய், இந்த விரதம் செய்து உன் பர்த்தாவுடன் சுகமாய் வா, சுவர்க்கத்துக்குப் போகலாமென்று, எமதருமராஜல் சொல்லப்பட்டது. சுசீலையும் மேற்சொன்னபடிசெய்து சுவர்க்கலோக மடைந்தாள். என்று ஈஸ்வரனல் சொல்லப்பட்டதைக் கேட்டு, குமாரசுவாமியும் இந்த விரதம செய்தார். ஆகையால், ஓ முனிசிரேஷ்டர்களே, நீங்களும் இவ்விரதத்தை செய்யுங்கள் என்று சூதபௌராணிகர், சௌனகாதி மஹரிஷிகளுக்கு சித்திரகுப்த விரத மகிமாதிசயங்களை உட

தேசித்தார்'' இந்தக் கதையைச் செவியிலல் கேட்டாலும், வாயிலற் படித்தாலுமை சகல பாபமும் நிவர்த்தியாகும். இந்த விரதம் செய்கிறவர்கள் சகல பாபதனின்றும் பிணி பற்ற நீண்ட ஆயுளுடனும், திரண்ட ஐஸ்வரியத்துடனும், புத்திர சம்பத்துடனும் வாழ்ந்து கடைசியில் மோக்ஷபதவி யை அடைவார்கள். இந்த சரித்திரம் ஸ்காந்தபுராணத்தில் சிவபெருமானுக்கும், குமாரசுவாமிக்கும் நடந்த சம்வாதத் தில் சொல்லிய சித்திரகுப்த விரதகதையின் மஹிமை.

இவ் விரதத்தை சாஸ்திரப்படி பயபக்தியாய் அனு சரித்து பூஜை செய்கிறவர்களுக்கு சிவபக்தி விர்த்தியும், கடவுள் கிருபையும் திண்ணமாய் உண்டாகும்.

சிவார்ப்பணமஸ்து

முற்றிற்று.

பக்தேஸ்வர விரத கல்பம்.

பூஜாரம்பம்.

சுபேசோபனே முஹூர்த்தே ஆத்தியப்பிரம்ஹணஃ திவிதீயபரார்தே ள்வேதவராஹகல்பே வைவஸ்வத மன்மந் தரே கலியுகே பிரதமபாதே ஜம்பூ திவீபே, பரதவருஷே பரதகண்டே அஸ்மின் வாத்தமானே, வியாவஹாரிக சாந் திரமாநேந, ஸம்வத்ஸரே, அயநே, ருதௌ, மாஸே பக்ஷே, அஸ்யாம் பூர்ணிமாயாம் வாஸரௌ சுபநக்ஷத்திர, சுப யோக, சுபகரண ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் சுப திதௌ மம பர்தாஸஹ, க்ஷேமஸ்தைர்ய விஜயாயுராரோக் கியைஸ்வர்யாபி விருத்தியர்த்தம் தர்மார்த்த காமமோக்ஷ சதுர்வித பலபுருஷார்த்த சித்தியர்த்தம் இஷ்ட காம்மி யார்த்த சித்தியர்த்தம் மம ஸமஸ்த துரிதோப சாந்தியர்த் தம், ஸமஸ்த மங்களா வாப்தியர்த்தம் புத்திர பௌத்தி ராபி விருத்யர்த்தம், ஸ்வாவஸிஷ்ட சித்தியர்த்தம் ஹள்தி, அஸ்வரதாங்தோளிகாச் சத்ரவாஹனாதி பிராபதியர்த் தம், வந்தியாத்வ நிவிர்த்தியர்த்தம், அகண்டித ஸ்ரீக்ஷ்மீபிர ஸாத சித்தியர்த்தம், ஸ்ரீ பக்தேஸ்வர தேவதா முத்திஸ்ய ஸ்ரீ பக்தேஸ்வர தேவதாப் பிரீத்தியர்த்தம், ஸம்பவிதா நியமேன ஸம்பவிதாப் பிரகாரேண, ஸம்பவத்பி திரவ் வியைஃ, ஸம்பவத்பி ருபசாரைஸ்ச கல்போக்தப் பிரகா ரேண யாவச்சக்கிய தியாண வாஹனாதி, ஷோடசோபசார பூஜாம் கரிஷ்யே நமஃ. இவ்விதமாய் ஸங்கல்பம செய் துக்கொண்டு, பிறகு கலச பூஜை செய்யவும். அதற்குப்

பிறகு, கணபதி பூஜை செய்து, உடனே பக்தேஸ்வர சுவாமிக்கு, பிராண பிரதிஷ்டை செய்து சுவாமியை தியானம் செய்கிறது. சு. ஸத்யோ ஜாதமபவம் சைவ வாமதேவம் பகோரத்பவம், ஜேஷ்ட சிரேஷ்டம தத்புருக்ரம காலகண்டம விசர்னகம, பலம் பலப்பிரமதனம் பூதக்கினஞ்ச மகேஸ்வரம்மனம, ஸதாசிவாதம் திரிணேத்ரம் ஸகல ஸௌராதம் கோடி சூர்யப்ரகாசம், விக்கியாதம் வாமதேவம், ஹ்ருதிதா விநிப்பம, ஸ்ஜ்ஜாநாநம் அக்கோரம், சத்துருணம் கோரரூபம், ஹியனலசதநிப்பம், தத்வபூர்ஷம் சிதாப்பம், ஈசானம் சாந்தரூபம், ஸ்படிகமணிநிபம், சிந்தயேத் பஞ்ச வக்த்ரம் || பக்தேஸ்வர சுவாமிநே நமஃ தியாயாமி || ப்பவோத்பவம் சிவாதீதம், ப்பாணுகோடி பிரபம் விபும், ஆவாஹயாமி பூதேசம் பவாநீபதி முத்தமம் || பக்தேஸ்வராய நமஃ ஆவாஹயாமி. வாமதேவ விரூபாக்ஷ, விபாஸ ஸன்னுதனைவ சிவ, மேதஸ்வரூபவரத ஆஸனம். ப்ரதி கிருஹ்ணஹியதாம். பக்தேஸ்வராய....நமஃ ஆஸனம் ஸ—மி. ஜ்யேஷ்டரூப நமஸ்துபாபியம, பஸ்மோத்தூளித விக்கிரஹ, ஜெயஜைத்ர விபூதித்துவம், கிருஹாணர்க்கியம் மயார்பிதம்|| பக்தேஸ்வராய....நமஃ அர்க்கியம் ஸ—மி. ஸுரசிரேஷ்ட ஜகசிரேஷ்ட, சிரவணோத்ந வைபவ, பாத்தியம் கிருஹாண மஹசம்போ, தேதேவச விருஷபத்துவஜ || பக்தேஸ்வராய....நமஃ பாத்தியம் ஸ—மி. ருத்ர ரௌத்ர ரூபேணசசாஹ. ராஜராஜப் பிரஸன்னுத, பஞ்சாமிருத ஸ்நாநமிதம் குரு கல்யாணதாயக || பக்தேஸ்வராய....நமஃ பஞ்சாமிருத ஸ்நாநம் ஸ—மி. கலஷிகரண விபோ, கமலாஸவந்தித, கார்த்திகேயஸ்ய ஜனக, ஸ்நாநம் குருதயாநிதே || பக்தேஸ்வராய ..நமஃ சுத்தோதக ஸ்நாநம் ஸ—மி. பல விகரணபல டாணுகோடிப்ரபாகர, பிருந்தாரகார்சிதபத,

வஸ்திரமாச்சாதனம் குரு || பக்தேஸ்வராய....நமஃ வஸ்திர்
யுக்மம் ஸ—மி. பலபிரபல ஸுப்ல பாணுஸுரவரப்பிரத,
பீஜரூப பிருஹத்தாம உபவீதம் கிருஹாணபோ || பக
தேஸ்வராய நமஃ|| எக்ஞோபவீதம் ஸ—மி. பலப்பிரம
தனபல, புத்திரூப புதப்பிரிய பில்வபத்ரப்ரியபல, பூஷ
ணாநி கிருஹாணபோ || பக்தேஸ்வராய....நமஃ ஆபரணாநி
ஸமர்ப்பயாமி || ஸாவபூதப் பிரமதன ஸர்வக்ஞ ஸகலோத்
பவ, ஸாவாத்மன் ஸர்வபூதேச, ஸுகந்த, ஸங்கிருஹா
ணபோ || பக்தேஸ்வராய....நமஃ கந்தான் ஸ—மி. மஹே
மன மஹாபாக, மாயாதீத மஹேஸ்வர, மஞ்ஜுமஞ்ஜீர
சரண ஸங்கிருஹாணகந்தான்விபோ || பக்தேஸ்வராய....
நமஃ || அக்ஷதான் ஸ—மி. அகார பரமப்பிரக்கிய, அநந்
தியா வ்யக்தஸ்வரூப, ஆனந்தாதித்திய ஸங்காச, புஷ்
பாணி பிரதிகிருஹ்ணியதாம் || பக்தேஸ்வராய நமஃ புஷ்
பாணி ஸமர்ப்பயாமி.

அதாங்க பூஜா.

ஸத்தியோஜாதாயநமஃ — பாதௌ பூஜயாமி
பவோத்பவாயநமஃ — குல்பௌ பூ—மி
பவாயநமஃ — ஜங்கே பூ—மி
வாமதேவாயநமஃ — ஜானுநீ பூ—மி
ஜ்யேஷ்டாயநமஃ — ஊரூ பூ—மி
ரேஷ்டாயநமஃ — கடிம் பூ—மி
ருத்ராயநமஃ — குஹ்யம் பூ—மி
காலாயநமஃ — நாபிம் பூ—மி
கலிகரணாயநமஃ — உதரம் பூஜயாமி
பலவிகரணாயநமஃ — ஹிருதயம் பூ—மி

பலாயநமஃ ஸ்தநௌ பூ—மி
பலப்பிரமதனாயநமஃ புஜௌ பூ—மி
ஸர்வபூததமனாயநமஃ வாமஹஸ்தம் பூ—மி
மநோன்மனாயநமஃ வாமாங்குளீன் பூ—மி
அக்கோராயநமஃ தக்ஷிணஹஸ்தம் பூ—மி
கோராயநமஃ தக்ஷிணாங்குளீன் பூ—மி
கோரகோரதராயநமஃ கண்டம் பூ—மி
ஸர்வாயநமஃ ஸ்கந்தௌ பூ—மி
சர்வாயநமஃ சுபுகம் பூ—மி
ருத்திரரூபாயநமஃ முகம் பூ—மி
தத்புருஷாயநமஃ ஜிஹ்வாம் பூ—மி
மஹாதேவாயநமஃ நாஸிகாம் பூ—மி
ருத்திராயநமஃ வாமசுரோத்திரம் பூ—மி
ஈசாநாயநமஃ தக்ஷிணசுரோத்திரம பூ—மி
ஸர்வவித்தியாதிபதயேநமஃ வாமநேத்திரம் பூ—மி
ஈஸ்வராயநமஃ தக்ஷிணநேத்திரம் பூ—மி
ஸர்வபூதாதிபதயேநமஃ லலாடம் பூ—மி
பிரம்ஹாதிபதயேநமஃ சிரஃ பூ—மி
சிவாயநமஃ ஜடாஜூடம் பூ—மி
ஸர்வேஸ்வராயநமஃ ஸர்வாண்ணியங்கானி பூஜயாமி

சிவாஷ்டோத்திரசத நாமபூஜை செய்யவும். இந்த அஷ்டோத்திரம், கேதாரேஸ்வர விரதத்தில் எழுதியிருக்கிறது, பார்த்துக் கொள்ளவும். இஷ்டமானால், ஸஹஸ்ர நாமமும் செய்யலாம்.

தூபதீப நைவேத்தியங்கள்.

கோரரூப நமஸ்துப்பியம், ஸர்வ காமார்த்ததாயக, தாபஃ ஸ்வரூபதனத தூபோயம் பிரதிகிருஹ்ஹியதாம் || பக்தேஸ்வராய....நமஃ தூபமாக்கிரூபயாமி|| கோரகோர நமஸ்துப்பியம், கட்கேகடதராவ்வியய, கண்டேடந்து பௌளீசிகர தீபோயம் பிரதி கிருஹ்ஹியதாம்|| பக்தேஸ்வராய....நமஃ தீபம் தர்சயாமி || நமஃஸர்வாயஸர்வேச, ஸர்வாவாஸ ஸநாதன, ஸதாநந்த ஸுராதிரேஷ்ட, நைவேத்தியம் பிரதி கிருஹ்ஹியதாம் பக்தேஸ்வராய....நமஃ நைவேத்தியம் ஸமர்ப்பயாமி|| சர்வாயச நமஸ்துப்பியம், ரஜநீசரபூஷண, சட்டிபா சங்கரகௌரீச, தாம்பூலம் பிரதிகிருஹ்ஹியதாம் பக்தேஸ்வராய....நமஃ தாம்பூலம் ஸமர்ப்பயாமி. ருத்திர ரூபநமஸ்துப்பியம், பக்தப்பிரியசதாசிவ, கஜசர்மபரீதான நீராஜனமிதம்தவ. பக்தேஸ்வராய....நமஃ கர்பூரநீராஜனம் ஸமர்ப்பயாமி|| தத்புருஷாய நமஸ்துப்பியம், தியுமயத்ரி லோசன, திரிஸ்வராகாரதத்வக்ஞ, மந்திரபுஷ்பம் கிருஹாணதேபா பக்தேஸ்வராய....நமஃ மந்திரபுஷ்பம் ஸமர்ப்பயாமி. சு. சாந்தம் பத்மாஸனஸ்தம் சசிதரமகுடம், பஞ்சவக்திரம், திரிணேத்திரம் சூலம் வஜ்ரோஞ்சகட்கம பரசுமபயதம, தக்ஷிபாகேவஹந்தம், நாகம் பாசஞ்சகண்டாம், ஸ்படிகமணிநிபம் பார்வதீசம் நமாமி|| சு. மஹாதேவ நமஸ்துப்பியம், மாயாதீத மஹாமதே, பிரதக்ஷணம் கரோமித்துவாம், பாபம் நாசயமேப்ரபோ || பக்தேஸ்வராய....நமஃ பிரதக்ஷணம் ஸமர்ப்பயாமி|| ஈசானய நமஸ்துப்பியம் பார்வதீபதயே நமஃ ஸர்வேஸ்வர நமஸ்துப்பியம், பஞ்சசக்திர் நமோநமஃ|| சு. சத்தியோஜாத நமஸ்துப்பியம், வாமதேவாயதே நமஃ அகோராய நமஸ்துப்பியம், தத்புருஷாயதே நமஃ பக்

தேஸ்வராய நமஃ நமஸ்காரான் ஸமர்ப்பயாமி. குபேர மித்
திர தேவேசபூதேசசக் திரிபுராந்தக, பார்வதீ ஹிருதயா
னந்த, கிருஹாணர்க்கியம் நமோஸ்துதே|| பக்தேஸ்வராய
நமஃ இதமர்க்கியம் ஸமர்ப்பயாமி. சு. கைலாஸவாஸின் தே
வேச புவனத்ரயபாலக|| ஹிமவத்புத்திரிகாகாந்த, கிருஹா
ணர்க்கியம் நமோஸ்துதே பக்தேஸ்வராய.... நமஃ இதமர்க்
கியம் ஸ—மி. சந்திரமௌளேத்ரயீனுத, ஜடாமகுடசோ
பித, உமாகாந்தமஸ்துப்பியம், கிருஹாணர்க்கியம் நமோஸ்
துதே பக்தேஸ்வராய நமஃ இதமர்க்கியம் ஸ—மி. நுண
பாதக தெளர்ப்பாக்கிய, தாரித்திரிய விநிவிர்த்தயே, அசே
ஷாக்க விநாசாய ப்ரஸீத மமசங்கர|| சு. துக்கசோகாதிஸந்
தப்தம், ஸம்ஸாரபயபீடிதம், பஹு ஜன்மாகுலம் தீனம்,
திராஹிமாம் விருஷவாஹன|| பக்தேஸ்வராய நமஃ, பிரார்த்
தனும் ஸமர்ப்பயாமி|| ஏஸயஸ்மிருத்தியாச நாமோக்தியா,
தபஃ பூஜாகிரியாதிஷு ந்யூநம்ஸம் பூர்னதாம்யாதி, ஸத்தி
யோவந்தே ஸசங்கரம, மந்திரஹீனம் கிரியாஹீனம் பக்தி
ஹீனமுமாபதே அநேந பூஜாவிதாநேந பக்தேஸ்வராய....
நமஃ ஸ—ப்ரீத ஸ—ப்ரஸன்னோ வரதோபவது||

இதி பூஜாவிதானம் ஸமபூர்ணம்.

பக்தஸ்வர விரத கதை.

ஒருநாள் நைமிசாரண்ணிய வாசிகளாகிய சௌனகாதி மஹரிஷிகள், முனி சிரேஷ்டரும் சகல புராண இதிஹாஸங்களை அறிந்தவருமாகிய ஸூதமஹா முனிவரைப்பார்த்து: "ஓமஹர் ரிஷியே, தங்களிடத்தில் அனேக விரத கதைகளைக் கேட்டிருந்த போதிலும், நாங்கள் மனத்ருப்தி அடையாமல் இருக்கிறபடியால், மென்மேலும் மிக ரகசியமான இன்னொரு கதை தங்களால் கேழ்க்க விரும்புகிறோம். தாங்கள் தயைசெய்து சொல்லவேண்டு" மென்று கேழ்க்க அப்போது ஸூதர் சொல்லத் தொடங்கினர்; "ஓ சௌனகாதி ரிஷி சிரேஷ்டரே, புத்திர பௌத்திர ஆயுர் விருத்தியும், முக்திகரமுமான பக்தஸ்வர விரத மொன்று சொல்லுகிறேன் கேளுங்கள்: முன்னொரு காலத்தில் கைலாஸத்தில் மிக அழகான நிர்மலமான ரத்தின சிம்ஹாஸனத்தில் சுகமாய் வீற்றிருந்து உலகங்களுக்கு க்ஷேமத்தையுண்டாக்கும்படியாய் பரமசிவனைப் பார்த்து உலகத்துக்கு நல்விஷயங்களை விருத்திசெய்ய விரும்பினவளான பார்வதியானவள் பிரஸ்னை செய்து கேட்டதாவது ஸமஸ்தமான பேருக்கும் சுகம் கொடுக்கும்படியான தும் ஓ பரமசிவா உங்களுக்கு நமஸ்காரம் செய்கிறேன், புத்திர ஸௌபாக்கியமும், ஆயுராரோக்கியமும கொடுக்கும்படியான தும் மலட்டுத்தனம் முதலிய தோஷங்களினின்றும் காப்பாற்றும்படியான உலகநன்மைக்குரியதான ஒரு கதை எனக்குச் சொல்லவேண்டு மென்று பிரார்த்தித்து தங்களுடைய உத்திரவை சிரஸாவஹித்து அந்த விரதம் செய்கிறேன் என்று சொல்ல, பரம

சிவன் சொல்லுகிறார்: "ஓ பார்வதீ, நான் சொல்லும் விரதத்தை நன்றாய் கேழ்ப்பாயாக, சரதருதுவில், கார்த்திகை மாத பூர்வபக்ஷ பருவத்தில உதயகாலத்தில் விதிப்படி ஸ்நாநாதி நித்தியகர்மங்களை முடித்து சித்திரவஸ்திரம் தரித்து, மஞ்சள், குங்குமம் தரித்துகொண்டு கணவனுக்கு மையிடடு ஆபரணங்கள் தரித்துக்கொண்டு, பர்த்தாவின் உத்திரவு பெற்று விரதாசரணம் செயயவேண்டும். நல்ல சந்தனத்திறல் ஈஸ்வரனையும், மஞ்சளால் பார்வதியையும், மணலால், நந்தியையும் ஏற்படுத்திக்கொண்டு, சிவ நாம மந்திரங்களால் பூஜை செய்ய வேண்டும். ஸ்திரீகள் நான்கு வர்ணத்தாரும் இவ்விரதம் செய்யலாம். சூரியன் அஸ்தமித்த பிறகு, வீட்டிலாவது அல்லது தேவாலயதிலாவது கோமயததால் மெழுகிய சுத்தமான இடத்தில், சித்திரக் கோலங்களிட்டு மண்டபமேற்படுத்தி மாயிலை தோரணங்கள் கட்டி அப்பிரதேசத்தில், பார்வதி பரமேஸ்வரர்களை ஆவாஹனமசெய்து பூஜைசெய்யவேண்டும். பக்தியோடு பூஜிப்பதால் பக்தேஸ்வரரென்று பெயர் வழங்குகிறது. ஸர்வ மங்களமாங்கல்யே, சிவேஸர்வார்த்த ஸாதகே, சரண்ணியே திரயம்பகே கௌரீ, பக்தேஸ்வர நமோஸ்துதே என்னும் புராணமந்திரத்தால் தியானாவாஹனாதி சோடசோபசார பூஜைகள் செய்து, மூங்கிலால் அநேக யந்திரங்களுள்ள ஜல்லடை ஏற்படுத்திக் கொண்டு முப்பத்திமூன்று கட்டுகள் பொன் கம்பியால் கட்டி, பூமியின் பேரில், பருப்பு, நெய், சர்க்கரை முதலியவைகள் சேர்த்தமாவினால் அப்பங்கள் தட்டிப் பரப்பிவைத்து, அதின்மீது ஜல்லடையைவைத்து, அதின் மத்தியில் ஒரு தோசையைவைத்து, அதின்மேல் சர்க்கரையும் நெய்யும் போட்டு, பச்சரிசி மாவினால் செய்த மாவு விளக்கு பாத்திரத்தில் வர்த்தி

போட்டு நெய்விட்டு விளக்கேற்றி, பிறகு, சுமங்கலியை பூஜித்து கௌரீ பக்தேஸ்வரர் சந்தோஷத்தின்பொருட்டு, அந்த (வேணு பாத்திரத்தை) அதாவது ஜல்லடையை தானம் செய்யவேண்டியது. கௌரீ பக்தேஸ்வரர்களை பிரார்த்தித்து, என்னை காப்பாற்றும். இந்த தானத்தினால் திருப்தி அடைந்து, எங்கள் குலத்தில் தீர்காயுசுடன், என் பர்த்தாவையும், புத்திர பௌத்திராதிகளும், தனதானிய ஸம்பத்தும், பசு விருத்தியும், பந்துக்கள் விருத்தியும் எனக்குக் கொடுத்து அனுகிரஹித்து எப்பை ரக்ஷிக்கவேண்டு மென்று பிரார்த்தனை செய்துக் கொண்டு, இவ்விதமாய் முதல் பருவத்தில் ஆசரித்துசெய்யவேண்டும். முன்போலவே, மார்கழிமாத பருவத்திலும், மாவு விளக்குகள் இரண்டும், இரண்டு தோசையும் வைத்து, தன் ஆயுள் விருத்திக்காக கௌரி தேவிக்குக கொடுப்பது. தைமாதத்தில் பருவதினத்தில் மூன்று விளக்கும், மூன்று தோசையும், மாசிமாதத்தில் நான்கு தோசையும், நான்கு விளக்கும் பங்குனிமாதத்தில் ஐந்து விளக்கும், ஐந்து தோசையும், சித்திரைமாதத்தில் ஆறுதோசையும், ஆறுவிளக்கும், வைகாசிமாதத்தில் ஏழுதோசையும். ஏழுவிளக்கும் இம்மாதிரியாய் ஏகோத்திர விருதியாக முப்பதுமூன்று பருவங்களிலும் ஆசரித்துச் செய்யவேண்டியது. அப்போதைக்கப்போது தெவிசமீபத்தில் வைதத தீபங்களையும் தோசைகளையும் சுமங்கலிக்கு தாம்பூல தக்ஷிணைகளுடன் கொடுக்கவேண்டியது" ஓ பாரவதிதேவி ன்திரீகளுக்கு, சௌபாக்கியகரமான இந்த விரதம் சொன்னோம், ஆனல் பூர்வத்தில் இவ்விரதம் யார் செய்து அனுசரித்தார்கள் என்று கேழ்க்க, இதற்கொரு இதிஹாஸமுண்டு அதைக் கேழ்க்

கிறவர்களுக்கு எல்லா பாவங்களும் விலகி மூவுலகத்திலும், ஸத்கீர்த்தி அடைவார்களென்று, ஸுதர் வாக்களிக்கிறார்.

பூமண்டலத்தில் கிருதமாலா என்னும் நதிக்கரையி லுள்ள மதுராபட்டணத்தில் மிக தர்மகுணங்களாலும் ரூப மும் ஸம்பத்துமுள்ளவனையும், இராஜ லக்ஷணங்களுடன் கூடியவனையும், சாஸ்திரங்கள் தெரிந்தவனையும், தனவந்த னையும், சூரனையும், சௌரிய தைரியமுமுள்ளவனைப் பிரதாபத்தி னாலும் கீர்த்தியினாலும் மூன்றுலோகங்களிலும் பேர் பெற் றவனான சந்திரவமசத்தில் பிறந்த சந்திரபாண்டிய மஹாராஜ னென்பனிருந்தார். அவருக்கு மஹா பாக்கியசாலியும், பதிவிரதாசிரோன்மணியும், பெரியோர்களைப் பூஜிக்கக்கூடிய வருமான குமுத்துவதி என்னும் பாரியாள உண்டு. அப் படிக்கொத்த அனுகூலமான களத்திரத்தினால் கூடியவரும், பூமியை யுடையவருமா, மெத்தைமேடைகளால் பிரகாசிக் கின்ற பட்டணத்தையுடையவரும், விசேஷதர்மங்களுடன் பரிபாலனம் செய்துக்கொண்டிருப்பருமானவர், புத்திர ஹீனத்தால் ஜனங்களில்லா வனத்தில், மிக பக்தியோடு நிராதாரனையும், ஜிதேந்தியனையும், சிவத்தியானம் செய்துக் கொண்டு சிவபஞ்சாக்ஷரமந்திரம் ஜபித்துக்கொண்டு, பதினாயிரவருஷம் இரவும் பகலும் ஒருபாதத்தின்மீது நின்றுக்கொண்டு தவம் புரிந்தார். இப்படி தவம் புரியும் போது, பத்துவருஷம், பழங்களைப் பக்ஷித்தும், மூப்பது வருஷம் ஜலாஹாரம் செய்துக்கொண்டும, வெயில்காற்று குளிர் மழை முதலியவைகளைச் சகித்துக்கொண்டு அஹங் காரமற்றவராய், உமத்தம் பூவினாலும், அசோகமான தாம ரை கமலங்களினாலும் சிவனை பூஜைசெய்து அதிதிகளுக்கு கந்தமூல பலங்களால் திருப்தி படுத்திக் கொண்டிருந்தார். அவருடைய ஆஸ்ரமத்தில், மிக ஆச்சரியமான தபோ

பலத்தினுல் புலிகளுடன் பசுக்களும், சிங்கங்களுடன் யானைகளும், கீரிப்பிள்ளைகளோடு ஸர்ப்பங்களும், ஜாதி பேதம் விட்டு விளையாடிக்கொண் டிருந்தது. சூரியன் பிரகாசிக்காமலிருந்தார், தேவதைகளும் நடுங்கி அவருடைய தபசைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருந்தார்கள். இப்படியிருக்க, அவருடைய உக்கிரமானதபசைமெச்சி பார்வதி பரமேஸ்வராள் திருப்தி அடைந்து பிரத்தியக்ஷமாய், தயையுடன் பரமசிவன் கேழ்க்கிறார்: ஓ ராஜ ராஜேந்திரரே உங்கள் பிதுர்க்களுடைய ராஜ்ஜியத்தைவிட்டு இப்படிக் காட்டில் என்ன காரணத்திற்காக தவம் புரிகின்றீர்களென்று கேழ்க்க, இராஜன் தன் பாரியாளுடன் சிவவாக்கியத்தைக் கேட்டு, மிகதிருப்தி அடைந்தவராய், தண்டனிட்டு பக்தியோடு அஞ்ஜலிபக்தராய் கைகூப்பிக்கொண்டு, நான் தன்னியனுனேன், அனுக்கிரஹிக்கப்பட்டேன், காப்பாற்றப்பட்டேன், பிரஸன்னமானீர். என் வம்ச விருத்தியின் பொருட்டும், இராஜ்ஜியம் பரிபாலிக்கும் பொருட்டும், தீர்காயுசுள்ள புத்திரனைத் தரவேண்டு மென்று கேழ்க்க, ஜன்மாந்திரபாபத்தினுல் உனக்கு ஸந்தானமில்லை, ஆகிலும் உன் பக்திக் கிணங்கி உன் கோரிக்கையை நிறைவேற்றுகிறேன். மாங்கல்யஹீனமான சிரஞ்சீவியான பெண் வேண்டுமா? அற்ப ஆயுலுள்ள புத்தியுள்ளவனை புத்திரன்வேண்டுமா? என்னவேண்டும் உன் கோரிக்கையை சொல்லுமென, இராஜன் சொல்லுகிறார்: பெண் தேவையில்லை, புத்திரனையே தயவு செய்யுமென்றுசொல்ல, பரமேஸ்வரன் ததாஸ்து என்று சொல்லி பார்வதி பரமேஸ்வராள் அந்தரத்யான மடைந்தார்கள். இராஜன் பட்டணம்வந்து சேர்ந்தார். சிலகாலத்திற்குப்பிறகு, குழுத்வதி சந்திரபாண்டிய மஹாராஜனல், கர்ப்பமடைந்தாள். பத்தாவது மாதத்தில், சுப

சுக்ஷத்திரயுக்தமான தினத்தில் ராஜலக்ஷணங்களோடுகூடிய நல்ல தேர்ச்சியுள்ள புத்திசாலியான புத்திரனைப் பெற்றுள். இராஜன் இந்த சுபவாத்தபானம் கேட்டு புத்திரோத்ஸவம் செய்து பிராம்மணருக்கு விசேஷதனம் தானம் செய்தார் ஜாதகர்மாதிகிரிகைகள் செய்து, ஈஸ்வரபாண்டியனெனும் நாமகரணம் செய்து, எட்டாவது வயதில் உபனயனம் செய்து, சகல வித்தைகளையும் கற்பித்தார். பதிணைறுவயது வந்த உடனே இந்த புத்திரன் எவ்விதத்தால் தீக்காயுக உடையவனுவான் என சிந்திதறுக் கொண்டு விவாஹம் செய்த பிறகு தெரியத்தக்கதென்று எண்ணி இருந்தார். இப்படியிருக்க அந்த சமயத்தில், மேன்மையானமனதுள்ளவரும், சிவபக்தனும், அலகாபுரியை பரிபாலிக்கும் மித்ரஸஹ னென்னுமஇராஜனொருவன் உண்டு. அவனுக்கு பக்தேஸ்வர விரதம் செய்யப்பட்ட கலாவதி என்னும் பாரியாளுண்டு. அவாகளுக்கு பக்தேஸ்வர விரதாப்பியாஸத்தால் ஒரு பிள்ளையும், ஒரு பெண்ணும் உண்டானார்கள். அக்கன்னிகைக்கு யௌவனம் வந்த உடனே கன்னியாதானம் செய்ய வேண்டுமென்று யோசித்திருக்க, மதுரை பட்டணத்து எஜமானனுடைய மந்திரிகள், அந்த கன்னிகையைப் பாற்க அவ்விடம் சென்றார்கள். அப்போது மித்திரஸஹ மஹா ராஜன் அந்த மந்திரிகளை வரவழைத்து தன்குமாரத்தியைக் கன்னியாதானம் செய்கிறதாய்சொல்லி மதுராபட்டணத்து இராஜனை சீக்கிரமாய் பந்துமித்திர ஸமேதராய் இவ்விடம் அழைத்து வரவேண்டுமென்று சொல்ல, அந்த மந்திரிகள் மதுரைக்குச் சென்று, இந்த சுப விருத்தாந்தம் எல்லாம் இராஜனுக்கு தெரிவித்தார்கள். அப்போது இராஜன் ஸந் தோஷித்து பார்யாள் பந்து ஸமேதராய், சதுரங்க சைனி யத்துடன் அலகாபுரிக்கு வந்தார். வந்தவர்களை மித்திர

ஸஹராஜன் பார்த்து ஸந்தோஷித்து, சாஸ்திரோக்த விதிப்படி பூர்ணமி தினத்தில் விவாகம நடத்தினர். அவர் பார்யாள் கலாவதி அந்த பருவதினத்தில் பக்தேஸ்வர விரதோத்தியாபனை செய்வதற்கு பிரயத்தனம் செய்த, முபத்திமூன்று பொன் கட்டுகள் போட்ட ஜல்லடையில், சந்தனக்கால், ஈசுவரனையும், பஞ்சவர்ல் செளரி தேவியையும, மணலால் கந்தியையும் ஏறபாடு செய்துக்கொண்டு கல்போக்தப் பிரகாரமாய் விதிவத்தாய், சந்தன புஷ்பாக்ஷதையுடன் நன்முய் பூஜை செய்து, பருப்பு, நெய், சர்க்கரையுடன் கலந்த முப்படதிமூன்று தோசைகளின்மீது, முபபத்திமூன்று மாவிளைசெய்த தீபங்களவைத்துக்கொண்டு, கலயாணி என்னும் பேருள்ள பெண்ணிற்கு, வஸ்தரம, சந்தனம், புஷ்பம், அக்ஷதைகள, மஞ்சல், குங்குமம, மைமச் சிமிழ் இவைகளால் அலங்கரித்து பக்தியோடு, அந்த ஜல்லடையை வாயனம் கொடுத்தாள். இந்த தோசைகளும், தானங்களும் இருந்த அந்த மூங்கில் பாத்திரத்தை பக்தஸ்வரருடைய திருப்திக்காக நான் கொடுக்கிறேன், கொடுக்கிறவர்களுக்கும் வாங்குகிறவாகளுக்கும், சௌமங்கல்யத்துக்கு கொடுக்கவேண்டும், புதிர பௌதத்திராபி விருத்தியையும் கொடுக்கவேண்டும், விரத பரிபூர்த்திக்காக கொடுத்தேன் என்று சொலலி தானமம்ப்து வரனுடைய ஐமீபத்திற்கு, கன்னிகையை அனுப்பி, பந்துக்களோடு சாப்பிட்டுக்கொண்டு ஸுகமாயிருந்தார்கள். அபபோது கல்யாண மானவரனுடன், அந்த கனனிகையும் படுக்கை அறையில் இருக்கும்போது, அறைக்குச் சமீபத்தில் மிருத்தியு தேவதை வந்து, அடிக்கடி கதவைத் திறக்கவேண்டுமென்று சொன்னது. அந்த வார்த்தையைக் கேட்ட கல்யாணியானவள் கதவு திறக்கிறதில்லை என்று சொல்ல,

பிறகு மிருத்தியு தேவதை சொல்லுகிறான். நான் மிருத்தியு தேவதை, அற்ப ஆயுள் உளள உன் கணவனை கூணத்தில் கொண்டுபோக வந்தேனென்று சொன்னன். பிறகு கல்யாணியானவள் பக்தேஸ்வர ரணுக்கிரஹத்தினல் சௌமாங்கல்யத்தால் என் பர்த்தாவிடத்தில் இருக்கிறேன், நீ எப்படி வருகிறாய், போ போ வென்று சொல்லி, பரமசிவனைப் பிரார்த்தித்தாள். "சரணுகத வத்ஸலேச, தயாசமுத்திரனே, ஓ பக்தேஸ்வரா என்று, மிருத்யுகிரஸ்தனன என் பர்த்தாவை ரக்ஷிக்கவேண்டுமென்று வேண்டி ஸ்தோத்திரம் செய்தாள். இதற்குள் மிருத்துதேவதைக்கு கண்கள் சிவந்து மிக கோபத்துடன் அதட்டிக்கொண்டு காலால் கதவுகளை உதைத்து உடைத்து உள்ளே சென்று பிடித்துக்கொள்ள பிரயத்தினம் செய்தான். தயாநிதியான ஈசுவரன் தீபக்கூட்டங்களினின்று படதேதாடு கால ஸாப்பமாய் மிக கோபத்துடன் மிருத்துவைக் கடிந்தது. அப்போது கண்கள் கிறுகிறென்று சுத்தி வந்து பயங்கரமான எமதர்மன் பூமியின்மேல் விழுந்தான். அதை சித்திரகுப்தாதிகள் பார்த்து பரமசிவனைப் பிரார்த்தித்தார்கள். பரமசிவன் மிக சந்தோஷித்து சித்திரகுப்தனைப் பார்த்து சொல்லுகிறார்: இந்த கல்யாணி என்பவள், என் பங்கில் ஈடுபட்டவள் பக்தேஸ்வர விரதம் ஆசரித்தவள், இந்த எமன் எவ்விதமாய் இவளுடைய பர்த்தாவை கொண்டு போகவந்தான். இப்போக்கொத்த என் பக்தர்களிடம் இனிமேல் வரத்தகாது, எமனைக் குறித்து மன்னித்தேன. இந்த எமனேடு உங்கள் ஸ்வயஸ்தானம் செல்லுங்கள் என்று அவர்களுக்கு உத்திரவு கொடுத்து பிறகு பார்வதி பரமேஸ்வராள் இந்த கல்யாணிக்கு சில வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். ஓ குழந்தாய் கல்யாணி உன் பர்த்

தாவினுடைய மிருத்துவைக் குறித்து இனி பயப்பட வேண்டாம். இனிமேல் நீ பக்தேஸ்வர விரதத்தை செய்ய வேண்டும். என் அனுக்கிரஹத்தால், நீ உன் பர்த்தா தீர்க்காயுளுடன் புத்திரசம்பத்தாய் ஸுகமா யிருப்பீர்கள் என்று சொல்லி பார்வதி பரமேஸ்வரர்கள் அந்தரத்யான மடைந்தார்கள். பிறகு அந்த கல்யாணியானவள் தன் பர்த்தாவுடன் அந்த இராத்திரி சுகமாய் இருந்து, மறு நாள் உதயத்தி லெழுந்து ஸ்நாநாதி கிருத்தியங்கள் முடித்துக்கொண்டு, விவாஹ மண்டபத்திற்கு வந்து உட் கார்ந்து நலங்கு முதலிய வேடிகைகைகள் நடத்திக்கொண் டிருக்கும்போது சுந்தர பாண்டியனும், குமுத்வதியும், தங்கள புத்திரன ஆயுசைக் குறித்து சிந்தை பட்டுக் கொண்டு, மருமகளுடைய தபோ பாக்கியத்தால் ஆயுசு உண்டாகுமென்று எண்ணிக்கொண் டிருந்தார்கள். அந்த ஸமயத்தில், கலாவதியும் அலமேகஸ்வரனும், வாத்திய கோஷத்தோடு சம்மந்திகளுடைய விடிதிக்குள் சென்று, பந்துக்களை அழைத்தார்கள். அவாகளும், சந்தோஷத் தோடு கல்யாண மண்டபத்திற்கு வந்து, வதூவரர்களைப் பார்த்து மிகச சந்தோஷித்தார்கள். அப்போது குமுத் வதியானவள், தன் மருமகளாகிய கல்யாணியிடம் சென்று, நீஜமாய் இராத்திரி நடந்த சமாசாரம் எனக்கு சொல்ல வேண்டுமே, ஏனென்றால் என் குமாரன் அற்ப ஆயுசுள்ள வன் உன்னுடைய மாங்கல்யபலத்தினால்தான் பிழைக்க வேணுமென்று இவனுக்கு விவாஹம செய்யப்பட்டது. இப்போது எந்த விரத மகிமையினல் உன் கணவனுக்கு தீர்க்காயுசு உண்டாச்சுதென்று கேழ்க்க, கல்யாணி உடனே இராத்திரி தங்கள் படுக்கைவீட்டில் நடந்த விருத் தாந்தத்தை உள்ளபடி மாமியார் மாமனருக்குத் தெரிவித் தாள். அந்த விருத்தாந்தங்களைக் கேட்ட மாமி மாமனர்

இருவரும் மிக சந்தோஷித்து மருமகளை அடிக்கடி கட்டிக் கொண்டு முத்தமிட்டு, அந்த விரதம் எனக்கும் சொல்ல வேண்டும், நானும் அதைச் செய்கிறேன் என்று மாமியான வள் கேட்டாள். அப்போதந்தப் பெண் பரமேஸ்வரன் தனக்குச் சொன்னபடி அந்த விரத மஹிமையை எடுத்துச சொன்னள். குழுத்வதி அந்த விரத பிரபாதத்தைக்கேட்டு, தானும் அந்த விரத மகிமையால் புத்திரபௌத்திர ஸம்பத் தோடு கூடினள். சந்திரபாண்டியன், இந்த புத்திரஸம்பத் தோடு கூடினவராய், மதுராபுரிபோய்சேர்ந்து விசேஷமான ஸம்பத்துடனும் கோதனத்துடனும் சுகமாய் வாழ்ந் தார். அதுமுதற்கொண்டு இந்த பக்தேஸ்வர விரதம உல கத்தில் பிரசித்தமாச்சுது" என்று பார்வதி தேவிக்கு பர மேஸ்வரன் சொன்னர். ஆகையால் சௌனகாதி மஹரிஷிக ளுக்கு இந்த விரதப்பிரபாவம் தெரிவித்தார். அப்போது பக்தேஸ்வர விரதம், பருவத்திலேயே செய்ய வேண்டு மென்று உலகத்தாருக்கும் பிரசித்தியாய் எல்லா ஸ்திரீக ளுக்கும இந்த நோன்பு ஆசரிக்கலாம். எந்த ஸ்திரீ இந்த நோன்பு செய்கிறளோ அந்த ஸ்திரீ, சௌபாக்கல்யத் தோடு புத்திர ஸம்பத்துடன், இவ்வுலகில் எல்லா சுகங் களையு மனுபவித்து பரலோகததில் சதாசிவனுடைய பாதாரவிந்த மடைந்து, பரமசுக மடைவாள் என்று ஸூத புராணிகர் சொன்ன வாக்கியங்களை, சௌனகாதி இருஷி கள் கேட்டு, மிக சந்தோஷத்தோடு தங்கள் தங்கள் பரி யாக்சளை விரதம் செய்யும்படி செய்தார்கள். அது முதல் பூமியில் இந்த விரதம் பிரசித்தமாச்சுது. இப்படி பவிஷ் யோத்தர புராணத்தில், பார்வதிக்கு பரமேஸ்வரன் உப தேசித்த பக்தேஸ்வரவிரத கல்பம் ஸம்பூர்ணம்.

அமாவாஸ்யா

சோமவார விரதம்.

ஆசம்மிய சங்கல்ப்யா || சுபேசோபனே முஹூர்த்தே .....ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம், அஸ்யாம் அமாயாம் சுபதிதௌமம, ஸமஸ்த ஜன்மஸு சௌபாக்கிய வ்ருத்தியர்த்தம், இஹ ஜன்மனி, ஜன்மாந்தரே ச, ஸகலபாப க்ஷயார்த்தம் புத்ர பௌத்ராத்யபி விருத்யா, ஸந்ததி, சிரஜீவித்வ, பரம சௌபாக்கியகாமா, அஸ்யாம் சோமவத்தியா, மமாயாம், பிரம்ஹ, விஷ்ணு, சிவாத்மக அஸ்வத்த விருக்ஷாயத்தா மிளிதோபசாரை:, மஹாவாக் காய கிருத மஹா பாதக நிவிருத்யர்த்தம், மஹாதஸ் வர்ய ப்ராப்த்தியர்த்தம் ஐஹிக, ஆமுஷ்மிக, ப்பலாவாப்தி யர்த்தம், ஸ்ரீ மஹாவிஷ்ணுப் ப்ரீத்யர்த்தம், பவிஷ்யோத் தர புராணோக்தப் பிரகாரேண அமா சோமவார விரதே லக்ஷ்மீ நாராயண பூஜாம, கரிஷ்யே நம: ஆதௌ கலச பூஜாம்:கிருத்வா, அனந்தரம், கணபதி பூஜாஞ்ச கரிஷ்யே நம:. பிறகு பீட்ட பூஜையும் துவார பூஜையும் செய்ய வேண்டியது. அரசமரத்தடியில், சுத்தப்படுத்தி, ஜலம் தெளித்து, கோலங்கள் போட்டு பூஜைக்கு வேண்டிய வஸ் துக்களை சேர்த்துக்கொண்டு, அம்மரத்தடியில் உட்கார்ந் துகொண்டு, வேதமந்திரத்தாலாவது அல்லது, புராணோக்தத் திலாவது, ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணப் ப்ரீதியின் பொருட்டு லக்ஷ்மீநாராயண தியானம் செய்துக்கொண்டு பூஜையை ஆரம்பிக்க வேண்டியது.

தியான சுலோகம். மூலதோப்பிரபஹ ரூபாய, மத் தியதோ விஷ்ணு ரூபிணே, அக்கரத: சிவரூபாய, விருக்ஷ ராஜாயதே நம: || இந்த மூல மந்திரத்தால் அரச மரத் திற்கு (அஸ்வத்த விருக்ஷத்திற்கு) சோடசோபசார பூஜை கள் செய்பவேண்டியது. பிறகு, சு. இந்திராதி ஸுர ஸம்ஸேவ்ய, யோகசித்ரா பாராயண, லக்ஷ்மியாஸஹ ஸுரஸேரஷ்ட, ஸுஸ்திரோபவ ஸர்வதா || தேவதேவ மஹாப்ராக்ஞ, லோகேச ஸுரபூஜித, யாவத் பூஜாம் ஸமர்ப்யேஹம் தாவத்துவம் ஸன்னிதிபவ || (அதோதேவா யிதி மந்திரேண அஸ்வத்தமூலே, விஷ்ணும் தியாத்வா; ஸ்பிருஷ்ட்வா பூஜயேத்து.) ஸ்ரீமதஸ்வத்த நாராயண தேவ தாப்யோநம: || தியானம் ஸமர்ப்பயாமி || சு. சரணம்மே ஜகன்னுத, சரணம் பக்தவத்ஸல வரதோபவமேஹாத, கருணா கர சாஸ்வத. ஸ்ரீமதஸ்வதத நாராயண ஸ்வாமிதேநம: ஆவா ஹனம் ஸமர்ப்பயாமி || சு. ஓம் நமோ வாஸுதேவாய சத் யானந்த சிதாதமனே, மூலானி, பிரம்ஹணேயஸ்ய, ருக் வேதோதங்கானி பல்லவா:, ப்பலானி எக்ஞசாகாஸ்ச, நார யண தயாம் குரு, ரத்னஸிம்ஹாஸனம் தூப்பியம் தாஸ் யாமி ஸ்வீகுருப்பிரபோ || அஸ்வத்த நாராயண ஸ்வாமிதே நம: ரத்ன சிம்ஹாஸனம் ஸமர்ப்பயாமி || சு. க்ஷகவா ஹன அலது கஜவாஹன ஸர்வக்ஞ, ஸர்வலக்ஷண ஸம்பூ தம், பாத்தியம் கிருஹாண மத்தத்தம், ஸ்ரீயாஸஹ ஸு ரோத்தம || அஸ்வத்த நாராயண ஸ்வாமிதே நம: பாத்தி யம் ஸமர்ப்பயாமி || சு. பரித்ராண பராயந்த, பத்மபத்ரே க்ஷணப் ப்ரப்போ, ஸ்ரீ க்ருஷ்ணர்க்கியம் மயாதத்தம் கிருஷ்ண விஷ்ணோஜகார்த்தன || அஸ்வத் நாராயண ஸ்வா மிதே நம: அர்க்கியம் ஸம....யாமி || சு. கர்ப்பூரே லாலவங் காதி சீதலம் ஸலிலம்விப்போ, ரமாரமண தேவேச ஆசம்மி

யம் பிரதி கிருஹ்யதாம் || ஸ்ரீமதஸ்வத்த நாராயண ஸ்வா மிநேநமஃ ஆசமநீயம் ஸ....மி || சு. நமோ நித்தியாய சுத் தாய, யோகித்யான பராயண, மதுபர்க்கம் கிருஹாணே தம், ஸர்வ லோகைகஜ்ஞயக || அஸ்வத்த நாராயண ஸ்வா மிநே நமஃ மதுபர்க்கம் ஸ...மி. சு. பஞ்சாமிருதம், மயா தீதம், பயோ ததிகிருதம்மது, சர்க்கராதி ஸமாயுக்தம், ஸ்நாநார்த்தம் ப்ரதி கிருஹ்ப்தாம் || ஸம் ஸ்நாபனம் கரிஷ் யாமி, லக்ஷ்மீ நாராயணப்ரட்போ || ஸ்நாநே நாநேந நே வேச, மமபாபம் வ்யபோஹது. அஸ்வத்த நாராயணஸ்வா மிநேநமஃ பஞ்சாமிருத ஸ்நாநம் ஸ....மி|| சு. கங்கோதகம ஸமா நீதம், ஸுவர்ண கலச ஸ்திதம், ஸ்நாபநார்த்தம் மயா நீதம், கிருஹாண பரமேஸ்வர || அஸ்வத்த நாராயண ஸ்வா மிநே நமஃ சுத்தோதக ஸ்நாநம் ஸ....மி. || சு கந்தாதி பூர்வ பூஜாம் கிருத்வா, அபிஷேகம் குர்யாத்து || தேவ தேவ ஜகன்னுத, நமஃ ஸ்ரீ வத்ஸதாரிணே, வஸ்திர யுக்மம், பிரதாஸ்யாமி, ஸம் கிருஹாண ஜகார்த்தன || அஸ்வத்த நாராயண ஸ்வாமிநே நமஃ வஸ்திரயுக்மம் ஸ....மி.|| சு. லக்ஷ் மீசாய நமஸ்தேஸ்து, தராஹிமாம் பவஸாகராத், பிரம்ஹ ஸூத்ரம் சோத்தரீயம், கிருஹாண ப்ரார்த்திதோ மயா. || அஸ்வத்த நாராயணஸ்வாமி நே நமஃ ஏக்நோபவீதம் ஸ....மி || சு. அஸ்வத்த ஹரே புகவாஸ, கேயூரிதாய, ஸதாஸ்ரய. அசேஷம், ஹரமேமபாபம், வ்ருக்ஷ ராஜநமோ ஸ்துதே || அஸ்வத்த நாராயணஸ்வாமிநே நமஃ || ஸ்ரீ சந்த காரணலங்காரான் ஸ....மி || சு. கர்ப்பூர குருகஸ்தூரி குங்குமோன் மிஸ்ர சந்தனம், துப்பியம் தான்யாமி தே வேச, ஸங்கிருஹாண நமோஸ்துதே|| (மலயாசல ஸம்பூதம் க்கனஸாரம் மநோஹரம், விலேபனம் ஸுர ஸ்சிரேஷ்டம் சந்தனம் பிரதி கிருஹ்யதாம.) || அஸ்வத்த நாராயண

ஸ்வாமிநே நமஃ கந்தான் ஸ....மி. || சு. தண்டுலா நார்த்த
கான் ஸ்வச்சான், மஹாவ்ரீஹி சமுதபவான், அக்ஷதான்
அற்பயேத்துப்பியம், கிருஹாண பரமேஸ்வர || அஸ்வத்த
நாராயண ஸ்வாமிநே நமஃ அக்ஷதான் ஸ....மி. || பால்யா
னிச ஸுகந்தீங், மாலத்யா தீனிசப்ரப்போ, மயாஹ்ருத
தானி பூஜார்த்தம், கிருஹாண கமலாத்திப || சு. துளஸீ
ஜாதிமகலா மல்லிகா சம்பகானிச, புஷ்பாணிஹர கோவிந்த
கிருஹாண பரமேஸ்வர || அஸ்வத்த நாராயணஸ்வாமிநே
நமஃ நாநாவித புஷ்பாணி பூஜயாமி. ||

அத்தாங்க பூஜா.

நாராயணாயநமஃ — பாதௌ பூஜயாமி
கேசவாயநமஃ — குல்பௌ பூ—மி
ஹரயேநமஃ — ஜங்கே பூ—மி
ஸங்கர்ஷணாயநமஃ — உளரு பூ—மி
வராஹாயநமஃ — கடிம பூ—மி
பத்மநாபாயநமஃ — நாபிம் பூ—மி
தாமோதராயநமஃ — உதரம் பூ—மி
காலாத்மநேநமஃ — ஸ்தநௌ பூ—மி
ராமாயநமஃ — ஸ்கந்தௌ பூ—மி
வைகுண்டாயநமஃ — கண்டம் பூ—மி
அனிருத்தாயநமஃ — பாஹூன் பூ—மி
பரமேஸ்வராயநமஃ — ஹஸ்தௌ பூ—மி
தேவாதிதேவாயநமஃ — முகம் பூ—மி
புஷ்கரேக்ஷணாயநமஃ — நேத்ரே பூ—மி
வாஸுதேவாயநமஃ — ஸிரோத்தே பூ—மி
ஸர்வவிபாபிநேநமஃ — ஸிர பூ—மி
ஸர்வேஸ்வராயநமஃ — ஸர்வாண்யங்கானி பூ—மி

அத்த நாமாவளி.

முதலில் ஓம் என்றும், கடைசியில் நமஃ என்றும் ஒவ்வொரு நாமத்திற்கும் சேர்க்கவும்.

ஓம் பரமாதமநே நமஃ
பரமேஸ்வராய
பரப்ரம்ஹணே
விரிஞ்சயே
சிவாய
ருத்ராய
நாராயணாய
வனஸ்பதயே
விருக்ஷராஜாய
வேதாதமநே
ப்ரகிருதயே
தேவாத்மனே
த்ரிமூர்த்தியாதமனே
ஊர்த்வமூலாய
சுசந்தஃ பர்ணாய
அவ்யயாய
பாபக்நிஷே
ஞானவிருக்ஷாய
பூதாவாஸாய
புண்யாய
சிவாகாராய
மஹாமூலாய
இருஷிஸேவிதாய
தபஃ ப்பலாய
அக்னிகர்ப்பாய
ஓம் அரணயே நமஃ
ஸமிதாகராய
ஸ்ருயாஸ்வஜாய
விபூதயே
சமீபதயே
அஸ்வதாதாய
கேசவாய
ஹரயே
ஸங்கர்ஷணாய
வராஹாய
பத்மநாபாய
தாமோதராய
காலாத்மனே
வைகுண்ட்நாதாய
அனிருத்தாய
பரமேஸ்வராய
தேவாதிதேவாய
புஷ்கரநேத்ராய
வாஸுதேவாய
ஸாவித்ரியாபதயே
ஸர்வேஸ்வராய
ஸ்ரீமதலஸத்த நாராயண
ஸ்வாமிநே
நாநாவிதபரிமள பத்ர புஷ்
பாணி ஸமாப்பயாமி.

ஸாவகாச மிருந்தால் விஷ்ணு ஸஹஸ்ர நாமமும் செய்யலாம். பிறகு தூபதீப நைவேத்தியாதிகள் செய்யலாம்.

குக்குலம் கிருதஸம்யுக்தம் காலுகந்தை ஸுஸம்யுதம், தூபம் கிருஹாண கிருபயா, ஸுப்ரீதோ வரதோபவ அஸ்வத்த நாராயணசுவாமிநே நமஃ தூபம் ஆக்கிரூபயாமி|| சு. அக்ஞானதமஜயேதி, ஞானபுத்திப் பிரதோப்பவ, அக்னிஞயோஜிதம் தீபம், கிருஹாண, பரயாமுதா அஸ்வத்த நாராயண ஸ்வாமிநே நமஃ தீபம் தர்சயாமி|| சு. திவ்வியான்னம், ஷட்ரஸோபேதம், நாநாப்பக்ஷியைஸ்ச ஸமயுதம், மயாப்பிரதத்தம் நைவேத்தியம், ஸங்கிருஹாண ஸ்ரீயாஸஹ|| ப்பக்ஷியம் ப்போஜ்ஜியம், லேஹ்யஹிபேயே, சோஷ்யஹியம், க்காத்தியம், மயாஹிருதம், பிரீதயே பரமேசஸ்ய தத்தம்மே ஸவீகுருப்ரப்போ அஸ்வத்த நாராயண ஸ்வாமிநே நமஃ மஹா நைவேத்தியம் நிவேதயாமி. பிராணாயநமஃ, அபாநாயநமஃ, வியாணயநமஃ, உதாணயநமஃ, ஸமாநாயநமஃ || சு. கங்கோதகம், ஸமாநீதம், பாநார்த்தம், பரமம சிவம், ஹிருஷீகேச நமஸ்துப்பியம் கிருஹாண பரயாமுதா, அஸ்வத்த நாராயணஸ்வாமிநேநமஃ மத்தியே மத்தியேபாநீயம் உத்தராபோசனம், ஹஸ்தப்பிரக்ஷாளனம், முக்கப்பிரக்ஷாளநஞ்ச கரிஷ்யே நமஃ கரோத்துவர்த்தநார்த்தே, சந்தனம. இதம்ப்பலமிதிப்பலானி பூகிப்பலமிதி தாம்பூலம், ஹிரண்ணியகர்பேதி தக்ஷிணம் ஸ....மி|| சு. துவத்ப்பாஸா, ப்பாஸ்வதேதலோகஃ கோடிசூர்ய ஸமப்பிரப, நீராஜயிஷ்யே த்துவாம் விஷ்ணே, கிருபாங் குருமயிப்பிரபோ அஸ்வத்த நாராயணஸ்வாமிநே நமஃ கர்ப்பூர நீராஜனம் தாசயாமி. சு. ஸ்ரீமதே, ஸர்வப்பூதாத்மன், த்ராஹிமாம், ப்பவஸாகராத், மதுஸூதன தேதேவச, கிருஹாண குஸுமாஞ்ஜலிம|| அஸ்வத்த நாராயணஸ்வாமிநே நமஃ மந்திரபுஷ்பாஞ்ஜலிம் ஸ....மி || சு. பிரதக்ஷிணத்ரயம் தேவம், பிரயத்நேநமயாகிருதம், தேநபாபாநி, ஸர்வாணி நாச

யாசு மமாவ்வியய. பிரதக்ஷிணம் ஸ....மி|| சு. வ்யக்தா வ்யக்த ஸ்வரூபாய ஸ்ருஷ்டி ஸ்த்தித்யந்த காரிணை, ஆதி மத்தியாந்த ஹீனாய விஷ்டாரஸ்ரவஸேநமஃ நமஸ்கரோம்யஹ மம் ப்பக்தியா, ஸர்வபாப ஹராவ்வியய, குருமே ஸபலம ஜன்ம, துவத்பாதாம்போஜ வந்தநாத். நமஸ்காரான் ஸ....மி|| சு லக்ஷ்மீச ஸர்வலோகேச ஸர்வஸம்பத் பிர தோப்பவ, கிருஹாணர்க்கியம் மயாதத்தம், கிருபயாபரயா மூதா. பிரஸன்னர்க்கியம் ஸ....மி|| சு தேவதேவ ஜகன் ணத சிருஷ்டி ஸம்ஹாரகாரக, சரணம் துவாம் பிரஸன் னேஸ்மி, த்ராஹிமாம் புருஷோத்தம, நிமக்னேஸ்மி மஹாக்கோரே, ஸம்ஸாரே, துக்கஸாகரே, மாமுத்த ரஹ்ருஷீகேச, போப்போபவ ப்பயாபஹ || இவ்விதமாய் அஸ்வத்த நாராயணனைப் பிரார்த்திக்கிறது. || அமாஸோம பூஜை செய்கிறது. அமாயைச நமஸ்துப்பியம, ஸோமாயச, நமோஸ்துதே, உபயோஃ ஸ்ஸங்கமே விஷ்ணோ, பூஜாப்பல மவாப்னுயாத்து. அமாயை, ஸோமாயசநமஃ, ஸர்வோப சாரார்த்தே. கந்தாக்ஷத புஷ்பதூபதீப, நைவேத்தியானி ஸமர்ப்பயாமி. அநேக மந்திரேண ஷோடசோபசாரைஃ, பஞ்சோபசாரைர்வா பூஜயேத்து. இவ்விதமாய் அமாஸோம பூஜை முடிந்தது. எஸ்யஸ்மிருத்தியாச நாமோக்தியா தபஃ பூஜாக்ரியாதிஷு, நியூனம் ஸம்பூர்ணதாம்யாதி சத்யோ வந்தே தமச்சுதம், மந்திரஹீனம், கிரியாஹீனம், ப்பக்தி ஹீனம், ஜநார்த்தன || அநேநபூஜயாச, நைவேத்தியேநச ப்பகவான் ஸர்வ தேவாத்மகஃ, ஸ்ரீ லக்ஷ்மீநாராயண ஸ்வ ரூப, அஸ்வத்த நாராயண தேவதா ஸுப்ரீதாஸ் ஸுப் ப்ரஸன்ன வரதோபவது என்று இந்த மந்திரத்தோடு அக்ஷதை, புஷ்பம், ஜலத்துடன் ஸ்வாமிக்குமுன்னே அர்ப் பணை செய்யவேண்டியது. அத்திய பூர்வோக்த ஏவங்குண

விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் சுபதித்தௌ - கல் போக்த ப்பலசித்தியர்த்தம், அஸ்வத்தமூலே அமுகத்ரவி யேண, அஷ்டோத்ர சதபிரதக்ஷிணக்கியம் கர்மகரிஷ்யே॥ என்று இக்த சங்கல்பத்தோடு 108-தடவை, அரசமரத்தை நாம் பிரதக்ஷிணத்திற்காக என்ன வஸ்து ஏற்பாடு செய்துக் கொண்டோமோ அதில் ஒவ்வொன்றுப் கையிலெடுத்துக் கொண்டு, அரசமரத்தை பிரதக்ஷிணம் செய்து, சுவாமிக்கு முன்புறம் போட்டுக்கொண்டே 108-தரம் வலம் சுத்த வேண்டியது. பிரதக்ஷிணம் செய்யும்போது சொல்லவேண் டிய மந்திரம் அல்லது சுலோகம் || மூலதோ பிரம்ஹ ரூபாய, மத்யதோ விஷ்ணுரூபிணே, அக்ரதஃ சிவரூபாய, விருக்ஷ ராஜாயதே நமஃ || இதி பிரதி பிரதக்ஷிண மூச்சரன், உக்த த்ரவ்வியம், பிரதக்ஷிணஸமயே விருக்ஷஸ்யாக்கிரே ஸ்தாப்பிய, ஏவ மஷ்டோத்திர பிரதக்ஷிணாந்தி காரியானி. அப்படி பிரதக்ஷிணம செய்தபோது போட்ட வஸ்துவை, பிராம்ஹணருக்கு தானபூர்வமாய் வாயனம் கொடுத்து, மிகுதியை மற்ற பேருக்கு உபயோகிக்கலாம். உவாயண தாம்பூலம் தக்ஷிணையுடன ஆசார்யருக்குக் கொடுக்குங் காலத்தில் சொல்லும்படியான மந்திரம். அஸ்வத்தஃ பிரதி கிருண்ஹாது, அஸ்வத்தோ வைதததாதிச, அஸ்வத்தஃ தார கோபாப்பியாம், அஸ்வத்தாய நமோ நமஃ என்று சொல்லி தாம்பூலம் கொடுக்கவும். அஸ்மைப் பிராம்ஹ ணாய, லக்ஷ்மீநாராயண ஸ்வரூபாய, இதம்திரவியம், அஸ் வத்த நாராயணப் பிரீதிம் காமயமான ஸ்துப்யமஹம் ஸம் ப்ரததே நமம. || வாங்குகிறவர் சொல்வது தேவஸ்யத்வா இதி பிரதி கிருண்ஹாமி || என்று சொல்வர்.

பூஜை முற்றிற்று.

அமாவாவஸ்யா சோமவதி

விரத கதை ஆரம்பம்.

தர்ம ஸ்வபாவமுள்ள ஸ்ரீ யுதிஷ்டிரர், சரதல்பத்தில் சயனித்திருந்த பாட்டனாராகிய பீஷ்மரிடம்சென்று, ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்து கேட்கிறார்: கௌரவாதரும் இன்னும் சில இராஜாக்களும் சேருக்கோடு கூடினவராய் இருந்தபடியால் பீமஸேனன் மிக கோபங்கொண்டவராய், இவர்களை ஜெயித்தார். துரியோதனனுடைய துராலோசனையினல் நம்முடைய குலமெல்லாம் நாசமடைந்தது. பூமியில் இராஜாக்களெல்லோரும், மித இளைத்துப் போனார்கள். பூமியில் சிறியவர்கள், பெரியவர்கள், வியாதியஸ்தர்கள் தவிர மற்றொருவருமில்லை. இந்த பாரத வம்சத்தில் நாங்கள் ஐவர் மீந்தோம். அப்போர்க்கொத்த ஒரேகுடையின்கீழ் ஆளுகை இருந்தும் பிரகாசமில்லாத தாயிற்று. நம்முடைய சந்ததியார் நாசமடைந்த விஷயத்தை ஆலோசித்துப் பார்க்கில் மனதில் கொஞ்சமாவது சந்தோஷம் உண்டாகவில்லை. அஸ்வத்தாமாவின் அஸ்திரத்தால் உத்திரையின் காப்பம் எரிந்ததால், பிண்டம் கலங்குதென்கிற வியஸன மதிகரித்தது. ஆகையால், நான் என்னசெய்வேன், எவ்விடம் செல்வேன் உத்திர க்ஷணத்தில் வெகுகாலம் ஜீவித்திருக்குமபடியான சந்ததி எப்படி யுண்டாகுமோ அதற்குபாயம் அறிவிக்க வேண்டுமென்று கேட்க, பீஷ்மர் சொல்லுகிறார். ஓ தர்ம புத்திரா எதை செய்தால் வெகுகால மிருக்கும்படியான சந்தான விருத்தி உண்டாகுமோ, அப்போர்க் கொத்த விர

தங்களில் உத்தமமான விரதம் சொல்லுகிறேன் கேள்: அமாவாசை சோமவாரத்தோடு கூடின தினத்தில், (அஸ்வத்தம்) அரசமரத்தடியில், விஷ்ணுவை பூஜை செய்து, நூற்றெட்டு எண்ணுள்ள ரத்தினங்களாவது, பொன் முதலிய ஸ்வர்ணங்களாவது, பழவாக்கங்களாவது எடுத்துக் கொண்டுபோய், அவ் விருக்ஷத்தை நூற்றெட்டு முறை பிரதக்ஷிணை வரவும். அப்படி சுத்திக்கொண்டு வரும்போது மேற் சொன்ன வஸ்துக்களில் சுத்துக் கொன்றாகப் போட்டுக்கொண்டு வரவும். "ஓ ராஜனே! இந்த சிரேஷ்டமான விரதம், மகா விஷ்ணுவுக்கு மிக இஷ்டமானதும், சிரேஷ்டமானதுமாம். ஆகையால், உத்திரைக்கு இந்த விரதத்தால், சிரஜீவகர்ப்ப உற்பத்தி உண்டாகி சேஷமமாயிருப்பாள். மூவுலகத்திலும் பிரசித்தமான கீர்த்தி பெரும்படியான புத்திரனைப்பெறுவாள். மேலும் இவ்விரதம், பிரம்மருத்திராளுக்கும், மிக திருப்தியுண்டாக்கும்படியான புண்ணிய விரதம். இவ் வரசமரம் திரிமூர்த்தி சுவரூபமானது. ஆகையால், உத்தரையைக் கொண்டு இவ்விதம் செய்துவையும்," என்று பீஷ்மர் சொல்லவே, தருமராஜன், பிதாமஹரைப் பார்த்து: "ஓ பிதாமஹரே! இப் புண்ணிய விரதம் யார் பூமியில் வெளிப்படுத்தி செய்தார்கள், இதைக் குறித்து விவரித்து சொல்லவேண்டு" மென்று கேழ்க்க, பீஷ்மர் சொல்லுகிறார்: "தர்ம நந்தன! கைலாயத்துக் கொபபான மெத்தை மேடைகளால் நிறைந்த, காஞ்சீபுரி என்கிற ஒரு பட்டணமுண்டு. அப்பட்டணத்தில் பிராம்ஹணர்தி நாலுவர்ணஸ்தர்களும், தங்கள் குலாசார தர்மங்களை சரிவர செய்துக்கொண்டு, ஸ்திரீ புருஷர்கள் ஸர்வாலங்காரத்துடன் கூடி இருப்பார்கள். அவ்விடத்தில் வேசியர்கள் ரூபலாவண்ணிய முள்ளவர்களாய் தங்கள்

யுக்தி சாமர்த்தியத்தால், ஜனங்களை வசப்படுத்தி வருவார்கள். அப்போர்க்கொத்த காஞ்சிநகரத்தை இரத்தினசேனன் என்கிற இராஜன் ஜனத்ருப்திகரமாய இராஜ்ஜிய பரிபாலனம் செய்துக்கொண்டிருந்தான். அந்த பட்டணத்தில் தேவஸ்வாமி என்கிற போர் பிரசித்தியான ஒரு பிராமணருண்டு. அவருடைய பாரியாள் லக்ஷ்மிக்கொப்பான மிக அழகுளள தனவதி என்கிறவள். அவள் மிக பதிவ்ரதா தர்மத்தோடு இருந்தாள். அவள் ஏழு புத்திரர்களையும் ஒரு ரூபவதியான பெண்ணையும் பெற்றாள். அந்தப் பெண்ணின் பெயர் குணவதி எனபடும். அந்த தேவசுவாமி என்கிற பிராமணர், தன் புத்திராகளுக்கு விவாகம் செய்துவைத்தார். அப் புத்திரர்களும் தங்கள மனவிகளுடன் சுகமாய வாழ்ந்துக்கொண்டிருந்தார்கள். தன் குமாரத்திக்கு பருவகாலம் வந்தே த, தாய்தகைதயாகள் அவளுக்குத் தகுந்த கணவனை த்தடிக்கொண்டிருந்தார்கள். இப்படி யிருக்க ஒரு பிராமணன் தன் தபோபலத்தினால அக்கினி தேவனைப்போல் பிரகாசித்துக் கொண்டு, அந்த தேவஸ்வாமியின் வீட்டிற்கு வந்து, வாசற்படியண்டை நின்றுக்கொண்டு ஆசீர்வாதம் செயதார். அப்போது அந்த வீட்டின் மருமக்கள்மார் ஏழுபேரும் உடனே எழுந்துவந்து, அந்த பிராமணருக்கு ஒவ்வொருவராய் பிசையிட்டாகள். அப்போது அந்த பிராமணர், அவ்வேழுபேர்களுக்கும் தீர்க்க மாங்கல்யமும், எல்லா ஐசுவரியமும் உண்டாகும்படி வாழ்த்தினர். பிறகு தனவதி, தன் குமாரத்தியான குணவதியை, அவருக்கு பிச்சை யிடும்படி அவளோடு சொல்லவே, அப்படியே அப்பெண் பிச்சை யிட்டாள். உடனே அந்த யோகி: அச்சிறுமியைக் குறித்து, 'ஓ பெண்ணே, நீ தர்மாத்மா ஆவாய்' என்று ஆசீர்

வாதம் செய்தார். உடனே குணவதி தன் முகத்தை சுளிக்கினவளாய் வீட்டிற்குள் சென்று தாயாருடன், அந்த பிராமணர் ஆசீர்வாதம் செய்ததை தெரிவித்தாள். அவள் தாயாரான குணவதி அதைக்கேட்டு தன் குமாரத்தியைக் கைபபிடித்து அழைத்துக் கொண்டுவந்து மறுபடியும் பிசைசயிடும்படி சொல்லி, பிச்சையிடவே, அவர் முன் போலவே ஆசீர்வதித்தார். அப்போது அப்பெண்ணின் தாய் பிராமணரைப் பார்த்து: 'ஓ பிராம்மணோத்தமரே, என் மருமக்கள் ஏழுபேரும் தங்களுக்கு பிசைசயிட்டு நமஸ்கரித்தபோது, அவர்களுக்கு தீர்க்க சௌமங்கல்யத்துவமும் சகல ஐசுவரியமும் முண்டாகும்படி வாழ்த்தினீர, என் குமாரத்தி நமஸ்கரித்தபோது தர்மிஷ்டி ஆவாய் என்று வாழ்த்தினீரே, அதற்குக் காரணம் தெரிவிக்கக் கோருகிறேன்' என்று கேழ்க்க, அப்போது அந்த பிராமணர் தனவதியைப் பார்த்து: அவளவளுக்குத் தக்கபடி நான் வாழ்த்தினேன் என்றார். ஆனல், இந்தப் பெண் கல்யாணத்தின் சப்தபதி மத்தியிலேயே அமங்கல்யத்துவமை—வாள, ஆகையால் தர்மம் செய்கிறது முக்கியமென்கிற காரணமாய், தர்மாநுஸரணம் செய்வது முக்கியமென்று ஆசீர்வாதம் செய்தேனென்று சொன்னர். அந்த வார்த்தைகளைக் கேட்ட தனவதி மிக சிந்தையோடு கூடினவளாய், அடிக்கடி அந்த பிராமணரைச் சேவித்து அவரைப் பார்த்து: 'ஓ தயாநிதே, நீர் நேரும் அபாயத்தைமாத்திரமறிவித்தீர, நான் என்ன செய்வேன், அதற்குரிய உபாயத்தையும் தாங்களே தெரிவிக்கக் கோருகிறேன்' என்று வினவ, ஓ தனவதி, சிம்ஹளத்தீவில சோமை என்னும் ஒரு ராஜகன்னிரி (வண்ணத்தி) இருக்கிறாள், அவளை நீ இவ்விடம அழைத்துவந்தால் உன் குமாரத்தியின் அமங்கலித்து

வம் நீங்குமென்று சொல்லி, அவர் பிச்சைக்காக வேறொரு இடம் சென்றார். பிறகு தனவதியானவள் தன் பிள்ளைகளைப் பார்த்து: என் பிள்ளைகளா! சோமை என்னும் ராஜகஸ்திரீ, சிம்ஹளத்தீவில் இருக்கிறளாம், அவளை அழைத்துவந்து உங்கள் தங்கை குணவதியின் வைதவ்விய துக்கத்தை விலக்கி விடுங்களென்று தாயார் சொல்ல, உடனே அப்பிள்ளைகளெல்லோரும், தாயே உன் எண்ணத்தைத் தெரிந்துக்கொண்டோம், உனக்குப பெண்ணினிடத்தில் மிக ஆசை யுண்டாயிருக்கிறது: எங்களை தேசத்தை விட்டுத் தூரத்தப் பார்க்கிறாய்; அந்த வழியின் மத்தியில், தாண்டமுடியாத சமுதரம் இருக்கிறது, அதை நாங்களெப்படி தாண்டிப்போக முடியுமென்று சொல்லவே, அப்போது தேவசுவாமி: எனக்கு ஏழு புத்திராகளிருந்தும் புத்திரர் இல்லாதவனானேன், என் புத்திரிகையுடைய அமங்கல்யத்துவத்தைத் துலக்க நானே அந்த சோமையை அழைதத்துக்கொண்டு வருகிறேன் என்று மிககோபத்துடன் சொல்லவே, கடைசி குமாரனை சிவஸ்வாமி என்கிறவன், "அப்பா கோபித்துக் கொள்ளாதேயும், நானிருக்க தங்களுக்கு இந்த கஷ்டம் எற்படவேண்டாமென்று சொல்லி, உடனே தன் தங்கையாகிய குணவதியை அழைத்துக்கொண்டு சிம்ஹளத்தீவிற்குப் போக புறப்பட்டு, சிலநாளுக்குள் அச்சமுத்திரக் கரையைச் சேர்ந்து, சமுத்திரத்தைத் தாண்ட முயற்சிசெய்துக்கொண்டு, அச்சமுத்திரக் கரையிலுள்ள ஒரு விசாலமான ஆலமரத்தடியில் அத்தினம் இரவு சயனித்துக் கொண்டனர். அந்த மரத்தில் ஒரு கழுகு மூட்டையிட்டு குஞ்சுபொரித் திருந்தது. அந்தக் கழுகு ஒவ்வொருநாளும் வெளியில் சஞ்சரித்து இரை சம்பாதித்து வந்து தன் குஞ்சுகளுக்கு கொடுக்கிற வழக்கம். அந்த மாழை

வின்படி அக்கழுகு அன்றையதினம் இரவு இரை கொண்டு வந்து குஞ்சுகளுக்கு வைக்கவே, அக்குஞ்சுகள் அந்த இரையைத் திண்ணவில்லை. அப்போது தாய்க்கழுகு, தன் குஞ்சுகளைப் பாராத்து. நீங்கள நான் கொண்டுவந்த இரையை ஏன் திண்ணவில்லை என்று கேழ்க்க. அந்தக் குஞ்சுகள் தாயைப் பார்த்து: "தாயே, இம் மரத்தடியில் இரண்டு மானிடர்களிருக்கிறார்கள், அவர்கள் சாப்பாடில்லாமல் பட்டினியாயிருக்க நாங்களெப்படி சாப்பிடலா'மென்று சொல்லிற்று. உடனே தாய் கழுகு தையுடன் கீழே இறங்கி வந்து, ஓ பிராமணனே, உங்கள அபிப்பிராயம் யான் அறிந்தேன். உங்களுடைய காரியம நான் செய்துக்கொடுக்கிறேன் என்று சொல்ல, சிவசுவாமி கழுகைப் பார்த்து: "நாங்களிந்த கடலைத் தாண்டி சிம்ஹளத்தீவைச் சேர்ந்து என் தங்கையின் அமங்கல்யத்துவத்தை போக்கடிக்க சோமை என்பவளை அழைத்துக்கொண்டு வரலாமென்று எண்ணுகிறோம்" எனறு சொல்ல, ஓ பிராபனனே சிரேஷ்டரே! நான் பொழுது விடிந்தபிறகு, உங்களை சிம்ஹளத் தீவுக்கு கொண்டுபோய் சோமையின் வீட்டைக் காண்பிக்கிறேன் என்று சொல்லி, தன் குஞ்சுகள் இருக்கும் கூடு சென்றது. இவர்களிருவரும் மரத்தடியிலேயே படுத்திருந்தார்கள். மறுநாள் காலையில் அந்தக் கழுகு, இவ்விரு வரையும் அந்தத் தீவிற்குக் கொண்டுபோய் சோமை என்னும் சாதிகைவீட்டு வாசற்படியைக் காண்பித்தது. அவர்கள் சோமை வீட்டைப் பார்த்ததுமுதல் ஒவ்வொருநாளும், அச்சோமையின் வீட்டின் முன்வாசலை பொழுது விடிவதற்கு முன்னமே பெருக்கி, சாணம் தெளித்து, மெழுகி சுத்தப்படுத்திக் கோலங்களிட்டுப் போய்க்கொண்டிருந்தார்கள். இப்படி அவரிரண்டு

சோபசார பூஜைகள்செய்து, ஐந்துவித நைவேத்தியங்கள் வைத்து தாம்பூலாதிகள் ஸமர்ப்பித்து ப்ரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்யவேண்டும். இவ்விதமாய் ஐப்பசி பூர்வபக்ஷ ஏகாதசிமுதல், கார்த்தீக சுத்த ஏகாதசிவரையில் பூஜை செய்யவேண்டும். ஏகாதசி தினத்தில் உபவாசமிருந்து கல்பத்தின்படி மஹாவிஷ்ணுவை பூஜித்து இராத்திரி (ஜாகரணம்) அதாவது கண்விழித்து மறுநாள் காலை துவாதசியில் ஸ்நாநம்செய்து, மடிவஸ்திரங்கள் தரித்துக் கொண்டு சுமார் ஐந்துபடி அரிசிமாவில் சர்க்கரை, பால் சேர்த்து பிசைந்து மூன்று உருண்டைசெய்து அதிலொன்றுத் துளசிக்கு நைவேத்யம் செய்து, பிராம்ஹணருக்கொன்று தானம்கொடுத்து, மற்றொரு உருண்டையை உரலில் போட்டு பால்விட்டு கருப்பங் கழிகளால் இடிக்கவேண்டியது: அப்படி இடிக்கும்போது ஸ்திரீகள் பாட்டுப் பாடிக் கொண்டே இடிப்பார்கள். அச்சமயத்தில் பால் துளிகள் எத்தனை தன் சரீரத்தில் விழுகிறதோ, அத்தனை வருஷகாலம்வரையில் ஸ்வர்க்கலோகத்தில் வாஸம் செய்வார்களென, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சொல்லுகிறார். "ஓ நாரதமுனிவரே! முன்னே யார் இவ்விரதம் செய்யப்பட்டு அவர் என்ன பலனடைந்தார்களென, நாரதர் சொல்லுகிறார்: "ஓ தேவகீநந்தனரே! பூர்வத்தில் வடதேசத்தில் வேதசாஸ்திரங்களைப் படித்துத்தேர்ந்த தேவதத்தரென்று ஒரு ப்ராம்ஹணரிருந்தார், அவர் தனக்கு சந்தான மில்லாமையால் திரிலோக கர்த்தனுகிய மஹாவிஷ்ணுவைக் குறித்துத் தவம்புரிகிறேனென்று நாட்டைத்துறந்து ஒரு பெரிய காட்டிற்சென்று ஒரு குளக்கரையிலிட்கார்ந்து மிகக் கடினமான தவம் புரிந்தார். அப்போது மஹாவிஷ்ணு ஒரு விருத்த வேதியரூபம் தரித்துக்

கொண்டு அந்த தவசிகளுமுன்னே தோன்றி, ஹே ப்ராம்ஹணகுல சிரேஷ்டரே! நீரேனிப்படி அகோர தபம புரிகின்றீர், சொல்லுமென, அந்த தேவதத்தன் விருத்த ப்ராம்ஹண ஸ்வரூபியாகவந்த ஸ்ரீமந்நாராயணனை வலம்வந்து நமஸ்கரித்து "ஓ ஜகந்நாதா! தங்கள் பாத தரிசனத்தால் என் ஜன்ம ஸாப்பல்யமாயிற்று. நான் கிரு தார்த்தனானேன்" என்று பலவிதமாக ஸ்தோத்திரம்செய்து நின்றபோது, அந்த ப்ராம்ஹண ஸ்வரூபி ஓவிப்ரோத்தமா உனக்கு வேண்டிய வரங்கள்கேளுமென, அப்போது தேவ தத்தன் சொல்லுகிறார்: "ஓ வாஸுதேவா! (அபுத்தரஸ்ய கதிர்நாஸ்தி) என்கிற த்தர்மசாஸ்திரத்தால், புத்திரஹீன னைபடியால் எனக்குக் கதிகளுண்டாகும்படி புத்ரபிக்ஷை அளிக்கவேண்டு" மென்று ப்ரார்த்திக்க, ஸ்ரீமந் நாராயண மூர்த்தி சொல்லுகிறார். ஓ ப்ராம்ஹண! அற்பாயுஸுள்ள பிள்ளையாவது, வைதவ்வியமடையும், பெண்ணையாவது கொடுக்கிறேன். இந்த இரண்டில் உனக்கெது இஷ்டமோ அதைச் சொல்லுமென, பிராம்ஹணன் வீட்டுக்குப்போய் ன் ப்பார்யாளைக் கேட்டுவந்து சொல்லுகிறேனென்று வீட்டுக்குபோய் தன் மனைவியுடன் அதைப்பற்றி ஆலோ சித்தபோது வைதவ்வியமடையும் பெண்ணையே கேளு மென்று பாரியாள் சொல்ல பிராம்ஹணன் பழையபடி அவ்விடத்திற்கு வந்து கமலநாபனை நமஸ்கரித்து ஒரு பெண்மகளையே தந்தருளவேண்டுமென்று கேட்க, அப்ப டியே பர்த்தாவில்லாத குமாரத்தியே உண்டாகக்கடவ தென்று சொல்லி ப்பகவான் அந்தர்த்தான மாயினர். பிறகு தேவதத்தன் வீட்டிற்குவந்து ஸுகமா யிருக்கும் காலத்தில் சிலநாட் கழிந்த பின்னர், இந்த ப்ராம்ஹண னுடைய ப்பார்யாள் கருவுற்று 10-ம் மாதத்தில் ஒரு

பெண்ணைப் பெற்றுள். அந்த பெண் குழந்தை நாளளவில் விருத்தி சந்திரனைப்போல் வளர்ந்துவந்தாள். சிலகாலத்திற்கு பிறகு ஐபிரண்டாண்டு பூர்த்தியாய் விவாகப் பருவகாலம் சமீபித்ததவுடன் அப்பெண்ணின் பிதாவானவதவதத்தன் ஒரு ப்ராம்ஹணப்பிள்ளைக்கு கன்னிகாதானம்செய்துவிவாஹம் நடத்திணர். அபபடிக் கொடுத்து கல்யாணமான இரண்டாமாத முடிவிலேயே அப்பெண்ணின் ஜன்மாந்திரபாபத்தால் அவள் கணவன் மரணமடைந்தான். இன்னும் சில நாளில் அவள் தாய்தந்தையரும் காலகதி அடைந்தார்கள். வைத்தவ்யமடைந்த அந்தப்பெண் தன் தகப்பனர் வீட்டிலேயே இருந்துகொண்டு தானதர்மம் செய்யாமலே வீட்டிற்கு வரும் பிச்சைக்காரர்களுக்கெல்லாம் நாஸ்தி நாராயணவென்று சொல்லிக்கொண்டு பிச்சை யிடாமல் மிகக் கடினமனங்கொண்டு இருந்தாள்.

இப்படி இருக்க ஒருநாள் ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் தன் மனதில் கீழ் வருமாறு யோசித்தார். ஓ ஹோ, இந்த விதவை கிஞ்சித்தும் இரக்கமில்லாமல் கடின நெஞ்சுடையவளாயினும் நாராயண என்னும் நாமத்தைமாத்திரம் விடாமல், ஸ்மரணைசெய்துகொண்டிருக்கின்றுள் என்று சந்தோஷித்து பிராம்ஹண சொரூபியாய் அந்தகைம்பெண் வீட்டிற்குவந்து உபாதானம் கேட்கவே, அவ் விரக்கமில்லாதவள் நாஸ்தி நாராயணவென்று சொன்னுள். அப்போது பிராம்ஹணவேஷதாரியாகிய ஸ்ரீமன்நாராயணமூர்த்தி ஓ அம்மா காலவேளையில் பிச்சைக்கு வந்த அதிதியை என் அவமதிக்கிறுய் என அந்த கைம்பெண்ணனவள், கண்கள் சிவக்க மிகக்கோபத்துடன் தான்மெழுகிக்கொண்டிருந்த சுருணையை, அந்த பிராம்ஹண வேஷதாரியும் ஜகத்ரக்ஷகருமான அவருடைய பிக்ஷாபாத்திரத்

தில் வீசியெறிந்தாள். உடனே அந்த பிராம்ஹணர் தூர விலகிப்போய் தன் பாத்திரத்தைப் பார்க்குங்கால், அந்த மெழுகின சுருணையுடன் ஒரு துவரையிருந்தது, அப்போது அந்த துவரையை, நாராயணமூர்த்தி மூலைக்கப்போட்டு வைகுண்டத்திற்கு ஏகினர்.

அத்துவரை சிலநாளில் மூளைத்து பெரிய செடியாகி இலைகள், புஷ்பங்கள், காய்களுடன் கூடியிருந்தது. அந்த விதவையும் சிலகாலத்திற்குமேல் மரணமடைந்து புழு வாய்ப்பிறந்து அந்தத் துவரைச்செடியிலிருந்த இலைகளைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தது இப்படி இருக்க சிலகாலஞ் சென்றபிறகு. ஜகந்நாதனுகிய நாராயணன் லக்ஷ்மீஸமேத ராய் விதவையாயிருந்து இப்போது புழுவாயிருக்கும் அந்தப் புழுவிடம்வந்து ஓ கீடகமே நீ நன்றுயிருக்கிறுயா என, அந்தப் புழுவானது, ஓ ஜகதீசா, உமக்குத்தெரியாத விஷயம் ஏதாவதுண்டா ! இவ்விதமாய் இலைகளைச்சாப் பிட்டுக்கொண் டிருக்கிறேனென, லக்ஷ்மிதேவி யானவள், தன் பர்த்தாவாகிய வைகுண்டநாதரைப்பார்த்து ஓ பிராண நாதா, இதற்கு இந்த புழுஜன்மம் வருவதற்குக் காரண மென்னவென்று கேட்க, நாராயணன் சொல்லுகிறார்.

இந்தப் புழு, பூர்வத்தில் மனுஷ்யகர்ப்பத்தில் பெண் ணைப்பிறந்து பாலியத்திலேயே விதவையாய், பிறகு புழு வாய் பிற்க்கிறவரையில் நடந்த கதையைச்சொல்ல,அதைக் கேட்ட மஹாலக்ஷ்மி, இவளுக்கு இந்த புழுஜன்மமெப்படி ஒழியுமென்று கேட்க, நாராயணன், ஓ பிராணநாயகி, இதற்கு கார்த்திகை மாதத்தில் சுத்தத்வாதசியில் நடத் தும் விரதப்பலனில் கொஞ்சம்கொடுத்தால் இந்த ஜன்மம் சாபல்லியமாகுமென, ஸ்ரீமஹா லக்ஷ்மி அப்பலனை உடனே கொடுத்தாள்.

அப்பொழுது அந்த புழுவானது ஸ்திரீ ரூபம் தரித்து லக்ஷ்மிநாராயணர்களை வலம்புரிந்து பிரதக்ஷிண நமஸ்காரம்செய்து லக்ஷ்மிதேவியோடு சொன்னாள்: ஓ ஜகந்மாதா இந்த் விரதம் நானும் செய்யப்பிரியப்படுகிறேன், அதை எனக் குபதேசம்செய்யவேண்டுமென்று லக்ஷ்மிதேவியைப் பிரார்த்திக்க அத்தேவி சொல்லுகிறாள். ஓ பெண்மணியே! கார்த்திக சுத்த ஏகாதசியில் உபவாஸம் செய்து துளசி பிருந்தாவனத்தில் மெழுகி பஞ்சவர்ணத் தோடும் ஐந்துவிதமான பத்மக்கோலங்களாலும் அலங்கரித்து ஷோடசோபசாராதி பூஜைகள்செய்து தூபதீப நைவேத்தியங்களால் விரத கல்பத்தின்படி துளசியைப் பூஜித்து அவ்விரவுமுழுமையும்கண்விழித்துபுராணஸ்ரவணங் கள்செய்து மறுநாள் உதயத்தில் ஸ்நானம்செய்து, சுத்த வஸ்திரங்களைத்தரித்து, முன்னுளைப்போல் துளசிதேவிக்கு புனர்ப்பூஜைகள்செய்து, சர்க்கரை, வெல்லம், பால், பச்சரிசி யாவில் போட்டுக்கலந்து, அந்த மாவை மூன்றுஉருண்டை யாக்கி, அதிலொன்றை, துலஸிக்கு நிவேதித்து அதை பிராமணருக்கு தானம்செய்து மிகுந்த உருண்டையை உரலில் போட்டு பால்விட்டு, சுமங்கலிகளுடன் பாட்டு பாடிக் கொண்டு, கருப்பங்கழிகளால் இடித்து, பிறகு பிராம்ஹணர்களையும் ஸ்திரீகளையும் பூஜைசெய்து அவர்களுக்குப் பழம் தாம்பூல தக்ஷிணைதிகளைக்கொடுத்து, அறுசுவையுடன் திருப்தியாக, அன்னமளித்து, பிறகு, தீர்த்த ப்ரஸாதங்கள் நாமும் சாப்பிடவேண்டியது. மேற்சொன்னவாறு ஐந்து வருஷம் இந்த விரதம் அநுஷ்டித்துக்கொண்டு வந்து, ஆரம்பத்திலாவது, மத்தியிலாவது, கடைசியிலாவது, உத்தியாபனை (அல்லது) விரத பூர்த்திசெய்யவேண்டியது. உத்தியாபனக்ரமத்தைச் சொல்லுகிறேன்கேள். முதலில்

லக்ஷ்மீ நாராயணப் பிரதிமைகளை சக்திக்குத் தக்கபடி பொன்னிலாவது, வெள்ளியிலாவதுசெய்து, சுத்தமான இடத்தில் கோமயத்தால் மெழுகிக் கோலங்களிட்டு, அவ்விடத்தில் இலைகள்போட்டு ஐந்து படிக்குக் குறையாமல் வெண்மையான பச்சரிசிக்கொட்டி அதில் பிரதிமாசோதனம் அப்பிஷேகம்செய்து வைத்து, மேற்சொன்ன பிரதிமைகளை வைத்து பிரதிமைகளுக்கு பிரத்யேகமாகவஸ்திரங்களைக்கட்டி சந்தன்புஷ்பாதிகளால் அலங்கரித்து ப்ராண ப்ரதிஷ்டை செய்து தூபதீப நைவேத்தியாதி ஷோடசோபசாரங்களால் லக்ஷ்மிநாராயணர்களைப்பூஜித்து ஐந்து தரம் பிரதக்ஷிண நமஸ்காரங்கள செய்து, இராத்திரி முழுமையும் நிததிரையில்லாமல் ஒரேமனதாய் புராண சிரவணதிகள்செய்து மறுநாள் உதயத்தில் ஸ்நாநாதி யனுஷ்டானங்கள் முடித்து, புநர்ப்பூஜாதிகள்செய்து சாதுவாயும் குடும்பியாயுமிருக்கும் ப்ராம்ஹணருக்காவது, (புரோஹிதருக்காவது) ப்ரதிமாதானஞ்செய்து, இரண்டு சுமங்கலிகளுக்கும், பதினைந்து ப்ராம்ஹணருக்கும், தாம்பூலவஸ்திர தக்ஷிணைகளால் திருப்திசெய்து, தம்பதி பூஜைகளும் நடத்தி, பந்துமித்ரர்களுடன் ஷட்ரஸோபேதமான போஜனம் செய்வித்து, தாம்பூலம் கொடுத்து இவ்விதமாக சக்திக்குத் தக்கபடி விரதபூர்த்தி செய்யவேண்டியது. விரதோத்தியாபனை செய்யாதவர்கள் புழுவாய் பிறப்பார்கள். ஆகையால் இந்த விரதம் செய்கிறவர்கள் எல்லோருக்கும் தங்கள் தங்கள் கோரிக்கைகள் பூர்த்தியாய் முடியும். இந்த விரதம் திருப்தியோடு செய்கிறவர்கள் இம்மையில் ஸகல சௌக்கியங்களுமனுபவித்து, மறுமையில் ஸ்வர்க்காதி போகங்களடைவார்களென்று ஸ்ரீமஹா லக்ஷ்மியால் அந்த இல்ல நாராயணியென்னும் பெண்ணுக்கு உபதேசிக்கப்

பட்டது. இவ்விரதத்தை யார் செய்தாலும் உலகத்தில் லக்ஷ்மிகடாக்ஷமுண்டாகி, சௌபாக்கியம் அடைந்து நெடு நாள் வாழ்ந்து பிறகு சத்கதி அடைவார்களென்று, ஸ்ரீமந் நாராயணனாலும் சொல்லப்பட்டது. இல்ல நாராயணி என்கிற பெண் இவ்விரத, உத்யாபனையும் க்ரமப்படி செய்து பிறகு நற்கதி அடைந்தாள். ஆகையால்ப்ருந்தா வனத்தில் ஸத்தியப்பாமையுடன் இருந்த சமயத்தில் நாரதரால் சொல்லப்பட்ட இம்மதனத்வாதசி விரதம் யார் செய்தாலும், அக்கதையை பக்தியோடு படித்தாலும், கேட்டாலும், ஸகல பாபங்களினின்று விடுபட்டு மேலான வைகுண்டபதவி அடைவார் என்பது திண்ணமென ஸ்ரீமந் நாராயணராகிய க்ருஷ்ணமூர்த்தியால் சொல்லப்பட்டிருக் கிறது. மேலும் ப்பவிஷ்யோத்தர புராணத்திலும், இவ் விரதத்தைப்பற்றி விசேஷப் பலனுண்டென்று சொல்லி யிருக்கிறது. அப்புராணத்திலும் இதுவிஷயம் படித்துத் தெரிந்துக்கொள்ளலாம் மிகப் புண்ய சரித்திரம்.

மத்தன த்வாதசி விரத கதை

முற்றிற்று.

ஓ

ஸ்ரீரஸ்து

ஸ்ரீக்ருஷ்ண ஜன்மாஷ்டமீ விதம்.

சு. அத்யஸ்திக்வா நிராஹாரோ, ஸ்வோப்பூதே பர மேஸ்வர, ப்ரபோஜ்யாமி தேவகீபுத்ர, பூஜாம்க்ருத்வா வித் தானதஃ. நியமமந்த்ரம் சு. துளஸீதளஸம்யுக்தம், யஸ்தோ யம், சிரஸாவஹேத் ஸஸ்நாத ஸ்ஸர்வதீர்த்தேஷீ, ஸர்வ யக்ஞ ப்பலம்லப்பேத். சு. வஸந்தியானிதீர்த்தானி, புண் யானிப்புவனத்ரயே, தேப்யஸ்தீர்த்தஸ ஹஸ்ரேப்யஃ பாவ நேப்பியோ நமோநமஃ. கலசாதக ஸ்தாபன மந்த்ரம். சு. பிபந்தம் பரம்த்யாயேத் ஸ்ப்ருசந்தம் பாணிநாபரம், விலோக்யமானம், ப்ரேமார்த்ர, மூக்கம் மாதுர் முஹுர் முஹுஃ. பிறகு, சங்கல்பம் செய்கிறது. ஏவங்குண, விசே ஷண விசிஷ்டாயாம், சுப்பதித்தெள, அஸ்மாகம் ஸஹ குடும்பாநாம், க்ஷேமஸ்ஸ்தைர்ய, விஜய ஆயுராரோக்ய, ஐஸ்வர்யாப்பி வ்ருத்யர்த்தம், ஸகலமநோரத்தாவாப்த்யர்த் தம், ஸமஸ்தஜன்மார்ஜித பாபநிவ்ருத்யர்த்தம், புத்ர பௌத்ராப்பி வ்ருத்யர்த்தம், த்தர்மார்த்த காமமோக்ஷ சதுர்வித்தப்பலபுருஷார்த்த லித்யர்த்தம், ஸ்ரீகோபிதேவி தேவகீ வஸுதேவஸமேத ஸ்ரீக்ருஷ்ண முத்திஸ்ய, ஸ்ரீக்ருஷ்ணப்ரீத்யர்த்தம், க்ருஷ்ணஜன்மாஷ்டமீ வ்ரத புண்யகாலே, ஸ்ரீகோபாலக்ருஷ்ணபூஜாங்கரிஷ்யே. (நமஃ) கதங்க, கல்சபூஜா, சங்க்க பூஜா, பீட்டார்ச்சனம், க்ருத்வா, அத்த ஸ்வர்நாக, ரஜதாத, தாம்பிரேண, ம்ருண்மயே நவா, ஸ்ரீகோபாலக்ருஷ்ணப்ரதிமாம் க்ருத்வா, பூஜாம்கரிஷ் யே. (நமஃ) பொன், வெள்ளி, செம்பு, அல்லதுமண்ணினு

வது, கோபாலர்களையும், ஸ்ரீக்ருஷ்ணனையும், பிரதிமாரூப மாய் செய்துவைத்து பூஜிக்கவும். மூலமந்த்ரேணவா, விஷ்ணு ஸூக்தேனவா, ஸர்வம் ப்ரதிவாக்யேந பூஜயேத் தீமான். அத்த த்யான ஸ்லோகம. ஸ்ரீக்ருஷ்ண கோபீஜன முக்ய விஷ்ணே, ப்ரம்ஹாண்ட குஹிம்ப்பரவாஸூதேவ, கோபஸ்த்ரீ ஸஹஸ்ர ஷோடஸ வல்லப்பாக்ய, கோவிந்த பீதாம்பரசங்க்ச சக்ரின். ஏவம்த்யாத்வா ஹரிம்ஸம்யக், ஸ்ரீகிருஷ்ணம் விஸ்பரூபிணம், இஷ்டகாம்யார்தத சித் யர்த்தம், பூஜாம் குர்யாத் யத்தாவித்தி. ஆவாஹயாமி தேவேச வித்தகந்த்தர்வஸேவித யத்ரஹஸ்யமிதம் புண் யம், ஸர்வபாப ஹரோஹரிஃ. தேவகீவஸூதேவ ஸமேத ஸ்ரீகோபாலக்ருஷ்ண ப்ரீத்யர்த்தம் ஸபரிவாரேண, ஆவா ஹனம் ஸமர்ப்பயாமி. தேவதேவ ஜகன்னத்த ப்ரணதஃ க்லேசநாசன, ரத்னஸிம்ஹாஸனம் திவ்யம் க்ருஹாண மத்துஸூதன. ஸ்ரீதேவ....நமஃ ரத்நசிம்ஹாஸநம் ஸ....மி. வாஞ்சிதம் குருமேதேவ துஷ்க்ருதஞ்ச விநாசய, பாத் யம் க்ருஹாண பகவன், மாத்ரு துத்ஸங்கஸம்ஸ்தித. ஸ்ரீதேவகீ.....நமஃ பாத்யம் ஸ... மி. குருஷ்வமே தயா தேவ, ஸம்ஸாரார்திப்பயாபஹ, தத்திகூஷீரஜலோபேதம், க்ருஹாணார்க்யம் நமோஸ்துதே, ஸ்ரீதேவகி....நமஃ அர்க் யம் ஸ....மி. ஸ்ரீவத்ஸ்தாங்க ஜகத்ரூப ஸ்ரீத்தர ஸ்ரீநிகேதந உபேந்திரதேவகீபுத்ர, க்ருஹாணசமநீயகம். தேவகீ.... நமஃ ஆசமநீயம் ஸ....மி. கோபவேஷ நமஸ்துப்யம், தத்தி கூஷீர ஸமன்விதம், மத்துபர்க்கம் க்ருஹணேதம், மயா தத்தம்ஹரிகேசவ. தேவகீ....வஸ....நமஃ மத்துபர்க்கம் ஸ....யாமி. சர்வாய ஸ்வர்கபதயே, கோவிந்தாய மஹாத் மனே, ஸ்நானம் பஞ்சாம்ருதம், தேவ, க்ருஹாணஸூர ஸத்தம, தேவகீ....வஸூ....நமஃ பஞ்சாம்ருத ஸ்நானம்

ஸ....மி. நாரிகேளோதகம் கங்கா, யமுனதிஸமுத்பவம், சுத்தோதகக்ருஹாணேச ஸ்நானம் குருயத்தாவித்தி. தேவகீ....நமஃ ஸ்நானம் ஸ....மி. ஆசம்யதாம் ஜகன்னாத்த ஸம்ஸாரார்ணவ தாரக, கோவிந்த பரமானந்த விஸ்வரூப நமோஸ்துதே தேவகீ....ஸமேத....நமஃ ஆசமநீயம் ஸ....மி. பீதாம்பராணி ஸர்வேச, நாநாவஸ்த்ரோப சோபித த்தாரயேத் விஸ்வரூபாத்மன், ஸ்ரீகிருஷ்ணஜகதாம்பதே. தேவகீவஸு....கோபால....ஸ்வா....நமஃ பீதாம்பரத் தார ணம் ஸ....மி. ப்ரம்ஹஸூத்ரம் சோபவீதம் த்ரயீநாத்த த்சராத்தர, கோவிந்த பரமாநந்த, வாஸுதேவாயதேநமஃ தேவகி....வஸு....ஸமே....நமஃ எக்ஞோபவீதம் ஸ....மி கேயூரவலயம்சைவ, க்ரைவேயம். குண்டலத்வயம், அங் குளீயகரத்ஞனி, ப்பூஷணாநித்ய க்ருஹ்யதாம். தேவகி வஸுதே....ஸ....நமஃ ஸர்வாப்பரணனி ஸ....மி. சந்தநா கருகஸ்தூரி, க்கணஸாரஸமன்விதம், கந்தம் க்ருஹாண கோபால, நாநாகந்தாம்ஸ்ச-த்தாரய. தேவகி....கோபா.... நமஃ கந்தம் ஸ....மி. கோவிந்த பரமானந்த ஹரித்ரா ஸஹிதா க்ஷதான், விஸ்வேஸ்வர விசாலாக்ஷ, க்ருஹாண பரமேஸ்வர. தேவகி....ஸமேத....கோபா....நமஃ ஹரித் ராக்ஷதான் ஸ....மி. சாமந்திகா வகுள சம்பக பாட லாப்ஜ, புன்னக ஜாஜி கரவீரஸாலபுஷ்பைஃ பில்வப்ர வாள, துளஸீதளமல்லிகாளி, த்வாம் பூஜயாமி, ஜகதீஸ் வர வாஸுதேவ. கோபலகிருஷ்ணப்யான்னமஃ பரிமள பத்ரபுஷ்பாணி பூஜயாமி. ஸ்ரீ க்ருஷ்ணம் பலப்பத்ரஞ்ச, வஸுதேவஞ்ச தேவகீம் ரோஹிணீஞ்ச ஸுபத்ராஞ்ச, யசோதாநந்தமேவச துர்க்காம் சைவ முனீம்ஸ்சைவ பூஜ யேத்கோபவர்த்தனம். ப்ரம்ஹாதீன் பூஜயேத். அஷ்டதிக் பாலகான் பூஜயேத். கஸ்யபாதிஸப்த இருஷீன் பூஜயேத்.

அத்தாங்க பூஜா.

த்ரிவிக்ரமாய நமஃ. பாதௌ பூஜயாமி.
கங்காப்ரப்பவாய குல்ப்பௌ பூ—மி
விஷ்வக்ஸேநாய ஜங்கே பூ—மி
ஜநார்த்தநய ஜாநுநீ பூ—மி
நீலாம்பராய ஊரு பூ—மி
கருடவாஹநய கட்டிம் பூ—மி
லோகப்ரப்பவாய குஹ்யம் பூ—மி
பத்மநாப்பாய நாப்பிம் பூ—மி
தாமோதராய உதரம் பூ—மி
கௌஸ்துப்பத்தாரிணே ஹ்ருதயம் பூ—மி
வநமாலிநே ஸ்தநௌ பூ—மி
கம்புக்ரீவாய கண்ட்டம் பூ—மி
திவ்வியாயுத்தாய ஸந்த்தௌ பூ—மி
சார்ங்பாணயே பாஹூன் பூ—மி
சக்ரத்தராய ஹஸ்தௌ பூ—மி
சந்தரமூக்காய முக்கம் பூ—மி
தேவகர்ப்பாய ஓஷ்டம் பூ—மி
உபேந்த்ராய. க்கராணம் பூ—மி
புண்டரீகாக்ஷாய நேத்ரே பூ—மி
விஷ்டரஸ்ரவஸே கர்ணௌ பூ—மி
மாத்தவாய லலாடம் பூ—மி
ஸர்வாத்மநே சிரஃ பூ—மி
தேவகீஸுநவே நமஃ ஸர்வாண்யங்கானி பூ—மி.

அனந்த விரதத்திலுள்ள 108-நாம க்ருஷ்ணஷ்டோத்திரத்தைப் பார்த்து பூஜை செய்துக்கொள்க.

தூபதீப நைவேத்யங்கள்.

சு. தசாங்கம் குக்குலம் த்தூபம், கோக்ருதேந ஸமன்விதம், த்தூபம் க்ருஹாணதேவேச, ஸர்வலோக நமஸ்க்ருத. தேவகீ வஸுதேவ ஸமேத ஸ்ரீ கோபால க்ருஷ்ணாய நமஃ த்தூபமாக்ராபயாமி. த்ரிலோகேச மஹாதேவ ஸர்வக்ஞானப்ரதாயக, தீபம் தாஸ்யாமி தேவேச, ரக்ஷமாம் ப்பக்தவத்ஸல. தேவகீ வஸு....கோபால....நமஃ தீபம் தர்சயாமி. ஸர்வ ப்பக்ஷணையஸ்ச ப்போஜ்யைஸ்ச, ரஸைஷ்ஷட்ப்பிஸ் ஸமன்விதம் நைவேத்தியந்து மயாதீதம் க்ருஹாண புருஷோத்தம. ஸ்ரீ கோபால க்ருஷ்ணாய நமஃ ப்பக்ஷியப்போஜ்யாதீன் நிவேதயாமி. ஸுத்தாரஸம் ஸுவிபுலம் மயாநீதந்து மாத்தவ, க்ருஹாண கலசாநீதம், யத்தேஷ்டமு பப்புஜ்யதாம். ஸ்ரீ கோபால ....நமஃ பூர்வாபோசனம் ஸ....மி. பாநீயம் பாவனம் ஸ்ரேஷ்டம், யேலகாதி ஸுவாஸிதம் கர்ப்பூரவாஸிதம் தோயம ப்ரீத்யர்த்தம் மத்ஸுஸ்தன. மத்தியே மத்தியே பாநீயம் ஸ....மி. உத்தராபோசனம் க்ராஹ்யம் ஹஸ்த ப்ரக்ஷாளனம் குரு. அனந்தரம் பாதப்ரக்ஷாளனம் குர்யாத். ஸ்வாமிக்கு அம்சையானபிறகு கைகால்களை சுத்தி செய்து வைக்கிறது. பிறகு சு. பூகீப்பலைஸகர்ப்பூரைர் நாகவல்லீ தளைர்யுதம், லவங்கேலா சூர்ணயுக்தம், தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம். ஸ்ரீ தேவகீ வஸுதேவ ஸமேத கோபாலாய நமஃ தாம்பூலம் ஸ....மி. ஸ்வர்ண புஷ்ப மிதம்தேவ, க்ருஹாண புருஷோத்தம, கோடி ஸூர்ய ப்ரதீகாசம், ஸ்வர்ணபுஷ்பம் மஹேஸ்வர. கோபாலக்ருஷ்ண ஸ்வாமிந நமஃ ஸ்வர்ணபுஷ்பம் ஸ....மி. கர்ப்பூரவர்தி ஸம்யுக்தம் தீபமாலாமஹேஸ்வர, நீராஜனம்

க்ருஹாணேச, தேவக்கியாநந்தவாத்ஸல்ய. தேவகீ வஸு தேவ ஸமேத ஸ்ரீ கோபால கிருஷ்ணாய நமஃ, கர்ப்பூரநீராஜனம் ஸ....மி. ஸ்ரீக்ருஷ்ண ஸர்வலோகேச, நாநாபுஷ்பைஃ ஸுராஜிதைஃ புஷ்பாஞ்ஜலிம் ப்ரதாஸ்யாமி, க்ருஹாணேச மயார்பிதம் ஸ்ரீ கோபாலாய நமஃ புஷ்பாஞ்ஜலிம் ஸ....மி. சு. தேவ தேவஜகன்னுத்த, வாஞ்சிதார்த்த ப்ரலப்ரத, ப்ரதக்ஷிணம் கரோமித்வாம், ஸம்ஸாரார்ணவதாரக. ஸ்ரீ கோபாலாயநமஃ ப்ரதக்ஷிணம் ஸ....மி. சு. கிருஷ்ணாய வாஸுதேவாய, தேவகீ நந்தனாயச, நந்த கோப குமாரார்ய கோவிந்தாய நமோநமஃ. ஸ்ரீகோபால கிருஷ்ணாயநமஃ ஸாஷ்டாங்க நமஸ்காரான் ஸ....மி. சு. அபராத்த ஸஹஸ்ராணி, க்ரியந்தேதஹர்நிசம்மயா, தாஸோஹமிதிமாம் மத்வாக்ஷமஸ்வ புருஷோத்தம என்று ப்பக வானை ப்ரார்த்தனை செய்கிறது. தேதாகந்தாக்ஷதைஃ புஷ்பைஃ பூஜயேச் சந்தரமண்டலம். சந்தரமண்டலத்தை பூஜைசெய்து பிறகு, அர்க்கியம் விடவேண்டியது. அர்க்கியத்துக்கு வேண்டிய புஷ்பம், அக்ஷதை, பழம் வைத்துக்கொண்டு அற்கியம் விடவேண்டியது.

அர்க்ய ஸ்லோகங்கள்.

சு. ஜ்யோதிஷ்மதே நமஸ்துப்யம், நமஸ்தே ஜ்யோதிஷாம்பதே நமஸ்தே ரோஹிணீகாந்த ஸுத்தாகர நமோஸ்துதே. மேற்சொன்ன ஸ்லோகம் சந்தர ப்ரார்த்தனை செய்கிற மந்த்ரம் (1) சு ஜாதஃ கம்ஸவத்தார்த்தாய, ப்பூபபாரோத்தாரணயச, தானவானாம் விநாசாய, வஸுதேவ குலோத்ப்பவ. ஸ்ரீ கோபாலகிருஷ்ணாய நமஃ ப்ரசத்தமார்க்கியம் ஸமர்ப்பயாமி. (2) சு. பாண்டவானாம் ஹிதார்த்தாய, த்தர்மஸம்ஸ்தாபணயச, கௌரவானாம் விநாசாய வஸுதேவ குலோத்ப்பவ ஸ்ரீகோபால

கிருஷ்ணாய நமஃ த்விதீயார்க்கியம் ஸ....மி. (3) சு. ஸ்ரா வண்யாம் க்ருஷ்ணபக்ஷே து அஷ்டமீரோஹிணீயுதா, தஸ் யாம் சந்த்ரோதயே, ராத்ரௌ பாலகிருஷ்ண ஸமுத்ப்பவஃ ஸ்ரீ கோபாலக்ருஷ்ணாயநமஃ திருதீயார்க்யம் ஸமர்ப்பயாமி. (4) சு. சந்த்ரார்க்கியம். சு கூஷ்ரோதார்ணவஸம்பூத அத் திரிநேத்ர ஸமுத்ப்பவ, கிருஹாணார்க்கியம் மயாதத்தம், ரோஹிண்யாஸஹிதஸ் சசின், ஸ்ரீகோபால க்ருஷ்ணாய நமஃ சந்த்ரார்க்கியம் ஸமர்....மி. சு. "யஸ்யஸ்ம்ருத்யாச நமோக்த்யா. இந்த ஸ்லோகம் கடைசியில்சொல்லி அக்ஷ தையும், ஒரு திருத்தொளா துளசீதளம் (அல்லது) புஷ் பம்சேர்த்து ஜலத்தோடு பகவானுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டியது. பூஜை முடிந்தது.

விரதப்பல ஸ்லோகங்கள்.

சு. நமஃ பரமகல்யாணநமஸ்தே விஸ்வமங்கள வாஸு தேவாய சாந்தாய, யதூநாம்பதயே நமஃ. நாரதௌளவாச. சு. ஜயந்தியாஸ்சைவ மஹாத்மியம, ஸ்ரீ க்ருஷ்ணஸ்ய மஹாத்மநஃ, யத்ருத்வாஹம் கமிஷ்யாமி, தத்விஷ்ணோ: பர மம்பதம்|| பிதாமஹௌளவாச|| ஸ்ருணுவத்ஸப்ரவக்ஷ்யாமி, ஜயந்த்யாஸ்ச ப்ரப்பாவகம் ஜயம்புண்யஞ்ச லப்பதே சிக் ரம் பாபஸ்யநாசனம். ஸ்மரணத் கீர்த்தனத்பாபம், ஸப்த ஜன்மார்ஜிதம் மூனே, ஜயந்திஹ்ரதே ஸர்வம் கிம்புநஸ் சோபவாஸிநாம், க்ருஷ்ணஜன்மாஷ்டமீலோகே பவித்ரா பாபநாசனீ க்ரதூநாஞ்ச ப்பலம்தேஷாம் தீர்த்தாயுத ப்ப லம் ப்பவேத்.

ப்பல ஸ்லோகங்கள் முற்றிற்று.

கதை ஆரம்பம்.

ஸ்ரீ மூனிஸ்ரேஷ்டராகிய நாரதர் உலக நன்மைக்காக சத்தியலோகம் சென்று, அவ்விடத்தில் வெண்தாமரையில் பிறந்து பத்மாஸனத்தின்மீது எழுந்தருளியிருந்த பிரம்ஹ தேவரைநோக்கி, "ஹே பிதா" ஸ்ரீ க்ருஷ்ணஷ்டமீ விரத மகத்துவத்தைபற்றி யான் கேழ்க்க விரும்புகின்றேன். ஆகையால், தாங்கள் தயவுகூர்ந்து எனக்குச் சொல்ல வேண்டுமென்று நாரதர் கேட்டார். அதற்கு பிரம்ஹ தேவர், "ஓ என் குழந்தையாகிய நாரதா சொல்லுகிறேன் கேள். அவ்விரதம் கலியுகத்தில் ஜனங்களுக்கு நேரும்படி யான எல்லா பாவங்களையும் பஸ்மமாக்கும்படியானதும், ஜயத்தையும், நன்மைகளையும் கொடுக்கும்படியானது. அதாவது ஜயந்தி என்று நினைத்தவளவில், ஏழு ஜன்மங்க ளில் தான்செய்த கொடிய பாபக்ருத்யங்கள் நாசமடையும் போது, ஜயந்தி தினத்தில் உபவாஸம் செய்தவர்களின் மஹா பாபங்களை போக்குமென்பதில் ஜயமுண்டா. இந்த க்ருஷ்ணஜன்மாஷ்டமி, மஹா பாவங்களைப் போக்குவது மன்றி, அஸ்வமேதமும், தீர்த்த ஸ்நானங்களும்செய்த ப்பல னுமாம். ஜயந்திதினத்தில் உபவாஸமிருந்தால் ஆயிரம் காராம்பசு, ரத்னகோடிகள் ஆயிரம் கணக்காகவும், அஸ்வ கஜதானங்களுடைய புண்ணியப்பலனும், அளவற்ற ஆபர ணதிகள் குருக்ஷேத்ரத்தில் தானம் கொடுத்தப் பலனும், கோடி கன்னிகாதானப் பலனும், அடைவார்கள். குரு வைக் குறித்தாவது, தன் எஜமானனைக் குறித்தாவது, பிராம்ஹணனின் பொருட்டும், தான் செய்த தேஹத்தியா கப் பலனும், ஆபத்திலிருக்கிறவர்களுடைய கஷ்டங்களை

விமோசனம் செய்த புண்ணியமும், தீர்த்தயாத்ராப் பல னும் அடைவார்கள். சத்தியவான்களுக்கு கிடைக்கும் புண்ணியமும், பௌர்ணமாவாஸ்யாதி ஸங்கிராந்திகளில் பிதுர்தேவதைகளை உத்தேசித்து செய்த, தீர்த்த ஸ்நாநப் பலன்களும், தற்பணாதிகள்செய்த புண்ணியமும், அநேக துவாதசி பாரணைதிகளால் தங்களுக்குகிடைக்கும் நன்மை யும், ஜயந்தினம் ராத்திரி ஜாகரணம்செய்த புண்ணிய மும், அம்பரீஷர், காதி, சிசுபாலாதி, இராஜ சிரேஷ்டர்க ளால் தேவதேவரான தேவகீபுத்திரனை திருப்திப்படுத்த கிருஷ்ணாஷ்டமியில்செய்த விரத விசேஷங்களாலும், இப் பூமியில் தங்களுக்குக்கிடைத்த இராஜ்ஜிய லாபமடைந்தப் பலன் அநுபவித்துக்கொண்டிருந்து, முடிவில் ப்பகவானு டைய கிருபையினல் வைகுண்டபதவி யடைவார்கள். மேலும் வால்மீகி, வால்க்கில்யாள், வசிஷ்டர், கௌதமர், ஜாமதக்னி முதலிய மஹரிஷிகள் இவ்விரதமனுஷ்டித்து செய்தார்கள். ஆவணிமாத கிருஷ்ணபக்ஷ அஷ்டமிதி தி யில் ரோகணி நக்ஷத்திரத்தில் இவ்விரதானுஷ்டான'ம் செய் தால் சதுர்ப்புஜரான சக்கிரபாணியினுடைய பாதஸேவை யால் அளவற்ற பாவங்களின்று விலக்கி நற்கதியடை யச் செய்வர். இவ்விரதம் எல்லா கோரிக்கைகளையும் கொடுக்கக்கூடியதாகையால் முருகந்தன்முன் பக்தியோடு மூன்றுமுக்கால் நாழிகையாவது பூஜித்து ப்பஜனம் செய் வார்களேயாகில், அவர்களுடைய பாவங்களெல்லாம் வில குரும். இதுவுமன்றி க்ருஷ்ணாஷ்டமி தினத்தில், சாப்பிடுகிற வர்கள் மூவுலகிலும் பாபங்களையே அநுபவிக்கிறவர்களா வதுமன்றி, சூத்திரான்னம், ப்ரேதான்ன ப்போஜனங் களால் அடையும் பாவத்திற் காளாவார்கள். இவ்விரதம் அநுஸரித்து செய்யாத மனிதன், கோஹத்தியை, பிரம்ஹ ஹத்தியை, ஸ்திரீஹத்தியை, கள்குடித்தல், மூர்க்கர்கள்,

பரான்னஸக்தர்கள் அடையும் பாபங்களுக்கு ஆளாவார்கள். எவ்வளவும் ஸுக்கம் அடையார்கள். ஓ நாரதா! க்ருஷ்ணஜயந்தி தினத்தில், ஸ்ரீக்ருஷ்ணனை யார் பூஜைசெய்கிறார்களோ, அவர்கள் தேவகீபுத்திரராய் அவதரித்த புருஷோத்தமனுடன் கூடிசந்தோஷமாய் ப்ரஸன்னமுகமாய் வாழ்வார்கள். ஆகையால், இவ்விரததினத்தில் தேவகீஸகிதமாக, ஸ்ரீக்ருஷ்ணனை ஆராதிப்பவர்கள், சுகமாய்விஷ்ணுபாதத்தைசேர்வார்கள். ஸ்ரீலக்ஷ்மீகடாக்ஷமும் பூர்த்தியாய் உண்டாகும். வாஸுதேவ ஸ்மரணையால், ராஜீக தைவிகமான ஸாவபயங்களும், சூரியனைக்கண்ட பனியைப்போல் நீங்கும். உலகத்தில் பசு தனதானிய ஸம்பத்துகளுடன் குடும்ப வ்ருத்தியாய் வாழ்ந்து கடைசியில் மோக்ஷ ஸாம்ராஜ்ய மடைவார்கள். ரோகத்தினாலும், துக்கத்தினாலும் உண்டாகும் பயங்களெல்லாம் பஸ்மமாகும். கலஹங்களும், உபத்திரவங்களும் கினவிலும் உண்டாகாது. மேலும் இன்னொருவிசேஷமுண்டு: இந்த ஸ்ரீஜயந்திவிரதம், ரோஹிணீநக்ஷத்திரம்கூடிய புதன்கிழமையில்வரும் ஸமயத்தில் விரதம்செய்கிறவர்களுக்கு, குலவிருத்தியும் எவ்விதஜயமும் உண்டாகும். ஓ! முனிஸ்ரேஷ்டரே பலமுறை என் சொல்லவேண்டும், இவ்விரதத்தில் தாய்தந்தைகள், குரு முதலானவர்களை பூஜித்தப் பலனுண்டாகும் என்று சொல்ல, நாரதர் இன்புற்று மறுபடியும் பிரம்ஹதேவரைப் பார்த்துப் பிரார்த்தித்து ஜயந்தீவிரதம், எவ்விதமான விதிவிதானகத்துடன் அனுஸரித்து செய்யலாமோ அதை எனக்கு உபதேசிக்க வேண்டுமென்று கேட்க்க, நாரதரை நோக்கி பிரம்ஹதேவர் சொல்லுகிறார். பூர்வத்தில் ஹரிச்சந்திரன், ஸனத்குமாரரை பிரார்த்திக்க, அவரும் இவ்விரதத்தையே உபதேசித்தார். எந்த விரதமாகிலும் ஊக்கத்துடன் கிரமமாய் செய்தால், பலன் உண்டாகும். விதிப்

படி செய்யாத விரதங்களால் க்ஷேமமுண்டாகாது. ஆகை யால், பக்தியோடு, இந்த விரததினத்தில், மத்தியான்ஹ வேளையில், பட்டிணி அல்லது உபவாஸமிருந்து, புத்ர மித்ர களத்திராதிகளுடைய க்ஷேமத்தை உதேதசித்து, எள்ளு, நெல்லிப்பருப்பு இவைகளை அரைத்து தலையில் தேய்த்துக்கொண்டு ஸ்நாநம் செய்து, துளசீதளத்தை கலந்த சுத்தஜலத்தில், மத்தியான காலத்தில் அனுஷ்டாந திகள் முடித்துக்கொண்டு, நிர்மதியான மனதுடன் பரி சுத்தமாய் யிருந்துகொண்டு வீட்டின் மத்தியிலாவது, விஷ்ணு ஆலயத்திலாவது, கோமயத்தினால் ஸ்தலத்தை சுத்தமாய் மெழுகி, கோல அலங்காரம்செய்து அவ்விடத் தில் ஒரு தலைவாழை யிலையைப்போட்டு. அதின்மீது பச்ச ரிசியைக்கொட்டி, ஒரு புதிதான கும்பம்வைத்து அதை சந்தனாக்ஷதபுஷ்பாதிகளால் அலங்கரித்து, வஸ்திரம் சுத்தி அந்த கலசத்தின்மேல், திரவியலோப மில்லாமல், சக்திக் குத்தக்கபடி, பொன்னால்செய்த பாலக்ருஷ்ண பிம்பத்தை வைத்து, கிரமமாய் பூஜைசெய்யவேண்டியது. இவ்வித மாகவே, ஸ்ராத்த, தான, ஹோம, தீர்த்தயாத்திரை களிலும், எல்லா விரதங்களிலும், குறைவின்றி ஏராளமாய் சக்திக்குத் தக்கபடி செய்யவேண்டும். அப்படி குரு ஆக்ஞைதவறி தங்களிஷ்டப்படி செய்கிறவர்கள் நரகத்திற் காளாவார்கள். ஆகையால் எந்த விரதமானாலும், நியமத் துடன் கிரமமாய்செய்யவேண்டும். இன்னும், தேவகீகர்ப் பத்திலிருந்து அவதரித்த ஜகத்பிதாவாகிய ஜநார்த்தனன் ஜன்மித்த ஸமயத்தில் ஜாதகர்மாதிகள்நடத்தி, சக்திக்குத் தக்கபடி பக்தியுடன், கோ, ப்பூ; தான்னிய, ப்பல; வஸ்திர தானங்கள் செய்யவும் "சுலோகம்" அதிதே தேவமாதஸ், துவம், ஸர்வபாபப்ரணாசிநி, அதஸ்த்வாம் பூஜயிஷ்யாமி, ப்பீதோஹம் ப்பவஸாகராத், பூஜிதாவி யத்தாதேவை:

பிரஸன்னத்வம் வராநகே, பூஜிதாசயதாப்பக்தியா பிரஸா. தம் குருஸுவ்வரதே என்கிற இந்த புராண சுலோகங்க ளால் தேவகீப்ரார்த்தனையும் செய்யவும். சு. அவதாரஸ ஹஸ்ராணி, கோராதிப்பகவான் ஹரிஃ, தேஷாம்ஸைவது மாஹாத்மியம், கஸ்சித்ஜ்ஜாநதிவைப்புவி, தேவப்ரம்ஹா தயோயேப்பி, ஸ்வரூபம்நவிது ஸ்தவ அதஸ்த்வாம் பூஜ யிஷ்யாமி, மாதுருத்ஸங்கஸம்ஸ்திதம், வாஞ்சிதம் குருமே மதத்ர, துஷ்க்ருதம் சைவநாசய, க்ருபாம்குருஷ்வமேதவ ஸம்ஸாரார்திப்பயாபஹர, என்கிற இந்த ஸ்லோகங்களால் ஸ்ரீக்ருஷ்ணப்ரார்த்தனைசெய்து அர்த்த இராத்திரியில் பன் னிரண்டுமணிக்கு, ஆவாஹநதிஷோடசோபசாரபூஜைகள் செய்து, சந்திரோதய ஸமயத்தில் வெளியே புறப்பட்டு, அவ்விடத்தில் பழங்கள் புஷ்பங்கள் சந்தனாதிகளால், அலங்கரிக்கப்பட்ட பூமியின்மீது, சங்கத்தினல் தீர்த்தம் எடுத்துக்கொண்டு, சந்திரனை உத்தேசித்து அர்க்கியம் விடவேண்டியது. சு. க்ஷீரோதார்நவஸம்ப்பூத ஹ்யத்தி நேத்ரஸமுத்ப்பவ, கிருஹாணார்க்கியம் மயாதத்தம், ரோஹிண்யா ஸஹிதஸ்சவின். ஜ்யோத்ஸ்நாபதே நமஸ் துப்பியம், நமஸ்தே ஜ்யோதிஷாம்பதே, நமஸ்தே ரோஹி ணீகாந்த ஸுத்தாகரநமோஸ்துதே. பிறகு இளநீர்ஜல மெடுத்து சங்கத்தில் விட்டுக்கொண்டு கீழே வரும் சுலோகத்தால், ஸ்ரீக்ருஷ்ணப்பிரீதியாக அர்க்கியம் விட வேண்டியது. சு. ஜாதஃ கம்ஸவத்தார்த்தாய ப்பூப்பா ரோத்தாரணயச, பாண்டவாணம் ஹிதார்த்தாய தர்ம ஸம்ஸ்தாபநாயச, கௌரவாணம் விநாசாய, வஸுதேவ குலோத்ப்பவ. தேவகீகர்ப்பஸம்ப்பூத, ப்பக்தாநாமப்பயப் ரத, க்ருஹாணார்க்கியம்மயாதத்தம், பிரஹீதபுருஷோத்தம க்ருஷ்ணார்க்கியம் விடவேண்டியது. அந்த இராமுழுதும், ப்பகவத் கதைகளால் ஜாகரணம்செய்து, தூபதீபநைவேத்

தியதாம்பூலங்கள்கொடுத்து, கர்ப்பூர தீபாராதனைசெய்து, சங்கீதவாத்தியம், நிருத்தியம் இவைகளால் பகவானை ஆராதனைசெய்தால், பூர்வஜன்மாந்திரத்தில் செய்த தங்கள் துரிதம் பாவும், தீயிலகப்பட்ட தூரும்பைப்போல் பஸ்மமமாகும். இதுவும்தவிர, மறுநாள் அதிகாலையில் ஸ்நாநாதி, சந்தியா அனுஷ்டானங்களை ஒரே நிலையான மனதுடன் தீர்த்துக்கொண்டு, ஷட்ரஸோபேதமான சித்ரான்னங்களுடன் அன்னப்பிரதானம் செய்து, ஆபால விருத்த பரியந்தம் பந்துமித்ராதிகளுக்கு போஜனங்களால் திருப்திப்படுத்தி, பிறகு தான் போஜனம் செய்யவேண்டியது. இவ்விதமாய் செய்பவர்களுக்கு அஸாத்தியமான விஷயம் ஒன்றும் கிடையாது. மேலும் இவ்விரதம் செய்யும் ஸ்திரீகளுக்கு, தௌர்ப்யாக்கியம், வைதவ்வியம் முதலிய பலவித துன்பங்கள் வராமல் நீங்குவதுமன்றி, இருபத்தெட்டுக்கோடி ஏகாதசி உபவாஸம் செய்த புண்ணியபலன்களுண்டாகும். ஆகையால், இந்த விரதம் விதிப்படி கல்பத்தில் சொன்னபிரகாரம் செய்கிறவர்களின் மகிமையால், வீணை, வேணு, ம்ருதங்க, வாத்ய விசேஷங்களால் கூடிய தேவவிமானங்களிலேறி, கருட வாஹனுதீசனை ஸ்ரீமஹாவிஷ்ணுவின் திருவடிகளைச்சேருவார்கள். ஆகையால் ஸௌர்யனைக்கண்ட இருட்டு விலகுவது போலும், வருணப்பகவானால் பஞ்சம் நீங்குவதுபோலும், கசடற்ற கல்வியினால் மதிவிளங்குவதுபோலும், ஆதவனைக்கண்ட பனிபறந்தோடுவதுபோலும் இந்த க்ருஷ்ணஜயந்தீ விரதமானது, பாபமென்கிற கூட்டத்தை விலகிபோகச் செய்யும். க்ருஷ்ண ஜன்மாஷ்டமீ விரதம் செய்யாதவன், பஞ்சமாபாதங்களுங்காளாவான் க்ரஹண புண்ணியகாலத்தில், கோதான, கஜதானம் முதலிய தானங்கள் செய்த போதிலும், இவ்விரதம்செய்யாவிடில் பிரயோஜனம் கிடை

யாது. ஆகையால், ஓநாரதரே! நீர் இவ்விரதம், அனுசரித்து செய்யயுமென்று சத்தியமாய்ச் சொல்லுகிறேன். முன்னே ஹரிச்சந்திரன் செய்து, அநேக சித்திகளடைந்தார். கங்கா நதிகள்கூட இந்த விரதத்திற்கு ஸமானமாகாது. இவ்விரதம், தர்ம, அர்த்த, காம, மோக்ஷங்கள் முதலியன கொடுக்கத்தக்கது. இந்த விரதகதை எழுதி யார் வீட்டில் பூஜை செய்யப்படுகிறதோ அவர்கள நாராயணன் சன்னிதியை அடைவார்கள். இந்த விரததினத்தில் ப்பகவானை ஆராதிப்பார்களேயாகில் அவ்விடத்தில், ஸர்வதேவஸமேதராய், ஸர்வேஸ்வரன் ப்ரஸன்னமாவார். சக்திக்குத் தக்கபடி இவ்விரதம் செய்பவர்கள், ஸகல மாணபாபங்களினின்றும் விலக்கப்படுவார்கள். அன்றியும் வேதாத்யான ப்பலங்களை அடைந்து மிக பரிசுத்தமாய் புருஷோத்தமன் பாதார விந்தங்களில் சேருவார்கள். இவ்விரதம் செய்வதால், ஆயிரகோதானப்பலனும், அநேகமான சுவர்னதானப் பலனும் அடைவார்கள். இவ்வண்ணம் இவ்விரதம்செய்து, வஸ்திராலங்கார பூஷண தாம்பூலாதிகளால், பிரதிமாதனம் செய்யவேண்டியது. இப்படி தான்செய்தால், இவ்வுலகில் புத்திரமித்திராதி ஸகலஸௌக்கியங்களையும் அனுபவித்து, முடிவில் ஸ்ரீமதனந்தன் பாதார்விந்த சமீபத்தில் சேருவார்கள் என்றுசொன்ன ப்ரம்ஹதேவன் வார்த்தைகளைக் கேட்டு நாரதர் மிக ஆனந்தத்தோடு சந்தோஷபரவசமடைந்தார்.

இதி ஸ்ரீப்ரம்ஹாண்டபுராணே ப்ரம்ஹ நாரதஸம்வாதே,

ஸ்ரீக்ருஷ்ணஜயந்தீவ்ரத கதாவிதானம்

ஸம்பூர்ணம்.

ஸர்வம் ஸ்ரீக்ருஷ்ணயணமஸ்து.

கிருஷ்ணஜயந்தி தினமகிமை.

ஸ்ரீ க்ருஷ்ணஜயந்தி விரதத்தை அனுஷ்டித்து செய்யவேண்டியது ஆவணிமாஸம் க்ருஷ்ணபக்ஷ அஷ்டமிதிதி ரோகிணி நக்ஷத்திரம் கூடியதினத்தில் நடத்துவது முக்கியம். அந்த க்ருஷ்ணாவதாரமென்பது: இருபத்தெட்டாவது சதுர்யுகத்திலுள்ள துவாபர யுகத்தில், பரமாத்மாவாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவே வடமதுராநகரத்தில் தேவகீதேவிக்கு புத்திரனாக அவதாரம்செய்தார். இதை "கோகுலாஷ்டமி" என்றும் ஆவணிமாத க்ருஷ்ணபக்ஷ அஷ்டமிக்கே பெயர் வழங்குகிறதுண்டு ஸ்ரீ க்ருஷ்ணாவதார தினத்தில் ப்பகவானை பூஜித்தபேர்களுக்கு தெரிந்து தெரியாமல் செய்த பாவங்கள் விலகிப்போம். இவ்விரதம் அனுஷ்டித்தால் த்தர்ம, அர்த, காம மோக்ஷமென்னும் நான்குவித புருஷார்த்தங்கள் கைகூடி வரும். அநேக காராம்பசுக்கள் தானம் செய்தப்பலன் இக்கிருஷ்ணஜயந்தி விரதத்திலுல் உண்டாகும். எவர்கள் இவ்விரதத்தை பக்தியோடு செய்கிறார்களோ அவர்களுக்கு லக்ஷ்மீகடாக்ஷத்தை இடைவிடாமல் வெகுகாலம் அனுபவிப்பார்கள். ஆகையால் ப்ரம்ஹ-க்ஷத்திரிய - வைஸ்ய - சூத்திராதிகள் எல்லோரும் அனுஷ்டித்துசெய்தால் நன்மையுண்டு. சிவ, விஷ்ணுபக்தர்களும், பாசுபதமதத்திலேயே இருப்பவர்களும், ஸ்திரீகளும், அவசியம் அனுஷ்டித்து செய்யவேண்டும். அநேக தேசங்களை ஆளும்படியானவர்களும், இந்தவிரதம் அனுஷ்டித்து செய்யலாமென்று பார்வதிக்கு பரமேஸ்வரன் உபதேசித்தார். ஸ்ரீ க்ருஷ்ணப்பகவானுடைய க்ருபைக்கு ப்பாத்திரர்களாகும் பொருட்டு அநேக இராஜாக்களும், ஞானிகளும், முனிவர்களும், ப்ராம்ஹணர்களும், இந்த விரதத்தை அனுஷ்டித்து மிக மேன்மைகளையும், இஷ்டலாபங்களையும் அடைந்தார்கள்.

ஸ்ரீ க்ருஷ்ணவதார காரணம்.

ப்பகவான் ஸ்ரீமன் நாராயணமூர்த்தியே, தேவர்களின் வேண்டுகோளால் பூமியில் த்தர்மத்தை நிலைநிறுத்தவும், அன்பர்களுக்கு கருணை செய்யவும், துஷ்டர்களை ஸம்ஹரிதது சிஷ்டாகளை பரிபாலனம் செய்யவும், பூமிப்பாரத்தைக் குறைத்து லோகங்களை ரக்ஷிக்கவும், ஸ்ரீ க்ருஷ்ணாக அவதரித்தார். எகரூபியான ஈஸ்வரனே தன் சக்தியை மூன்றுவிதமாகச் செய்து, சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்கள் நடத்தும்படியான த்ரிமூர்த்யாத்மகமான மூன்று ரூபங்களை எடுத்து ஜீவாத்மாக்களை சிருஷ்டிக்கவும், ரக்ஷிக்கவும், ஸம்ஹரிக்கவும், ப்ரம்ஹா, விஷ்ணு, மஹேஸ்வரர்களாக அவதரித்தார். பரமாத்மா இவ்விதமாய் ப்ராணிகளை ஆட்டிவைக்கிறார் என்கிற அனுமான ப்ரமாணத்தை உலகத்தாருக்கு ப்ரத்யக்ஷமாய் அறிவிக்கும்படி ஸ்ரீக்ருஷ்ணாவதாரம் எடுத்தார். சக்திக்குத்தக்க பக்தி என்பதை தெரிவிக்க, பூர்ண பக்திமான்கள் மோக்ஷத்தையும், குறைந்தப்பக்திமான்கள் தாழ்ந்த பதவியையும், ப்பகவான் கிருபையினால் அடைகிறார்கள். இவைகளை உலகத்தார் அறியவேண்டி இந்த கலிகாவதாரம் எடுத்துக்காட்டினர். அந்தச் சமயம் தேவர்களையும, பூமியில் அவதரிக்கும்படி கட்டளையிட்டு, தானும் பூமியில் வாசம்செய்ய நினைத்தார்.

ஸ்ரீ க்ருஷ்ணன் பெருமை.

இவரே முற்காலத்தில் அசுரர்களைக் கொன்றார். இவரே தேவாதி தேவராயிருந்தார். ப்ராணிகளை யுண்டாக்கி, அவர்களுக்கு மங்களம் கொடுப்பதிவரே. உலகத்தை காப்பதுமிவரே. தர்மம் குறைந்தபோது தானே தர்மத்திலிருந்து மேலும் கீழுமான உலகங்களைக் காப்பாற்றி, கார்யகாரணமான நித்திய ஆத்மாக்களையும் காப்

யாற்றுகிறார். ப்பூத, ப்பவிஷ்யத் வர்த்தமானங்களையும் அறிந்தவர் இவரே. யாகங்களில் அஸ்த்ர சஸ்த்ர மந்திரங்களைச்சொல்லி துதிப்பதும் இவரையேதான். சதுர்வேதத்திலும், இரதந்தராதி ஸாமவேதங்களிலும் இவரையே துதிக்கின்றனர் இவர்தான் ப்ரளயகாலத்தில் ப்ரம்ஹ குகை என்னும் மூலப்ரக்ருதியில் ப்ரவேசித்தார். பூமியின் ஸ்ருஷ்டியும் கடலினின்று பூமியை உத்தரித்த ஆதிமூலமிவரே. இவராலேயே ப்பூமியை மூன்றடியாய் அளந்து ஜயிக்கப்பட்டது. காண்டவவனத்தை எரித்தவரிவரே. அர்ஜுனனுக்கு வெண்குதிரை தந்தவரிவரே. இவரையே லோகாராட்டிய ரென்றும், அந்தர்யாமி எனவும் உபனிஷத்தில் (வாஸுதேவ ஸ்வாமி) என்கிற வாஸுதேவரென்றும் ஜீவாத்மாக்களுக்கு அதிஷ்டான தேவதையாயிருப்பதால் ஸங்கர்ணரென்றும "த்யும்ந" என்னும் தனம் போன்ற சுகத்தை தருவதால் ப்ரத்யும்னரென்றும, தனையை நீக்கி ப்ரவர்த்தியை உண்டாக்குவதால், நான்காவதான அனிருத்தரென்றும் சொல்லப்படுகின்றார். இவருக்கு மேல் ஒன்றுமில்லை. இவருக்கே இந்தியாவில் பல இடங்களில் ஸ்தலங்களிருந்தாலும், சென்னையில் சமுத்திரகரையில் திருவல்லிக்கேணியில் எற்பட்டிருக்கும், ஸ்ரீபார்த்தஸாரதிகோயில் விசேஷமாயிருக்கிறது. ஆகையால் ஸ்ரீக்ருஷ்ணப்பகவானைக் குறித்து சொல்லவேண்டியது அனவற்ற விஷயங்களுண்டு. ஆதிஸேஷனுக்கே இவரைப்பற்றி சொல்லமுடியா தென்பார்கள். உலகத்தில் பரிசுத்தமான சூரியன் சந்திரன் முதலிய சுடர்களும், பூவுலகங்களும் அவற்றின் அதிபதிகளும், மூவருந் த்ரேதாக்னிகளும், (ப்ராண, அபான, வ்யான, உதான, ஸமாநாதி) ஐந்து ஆகுதிகளும் எல்லாமிவரே.

ஸர்வம ஸ்ரீக்ருஷ்ணர்பணமஸ்து.

உ

ஸ்ரீஸாம்பசிவாய நம:

ஸ்ரீரஸ்து

கேதாரேஸ்வர விரதகல்பம்.

ஏவங்குண விசேஷண விசிஸ்டாயாம் அஸ்யாம் சுப்ப திதௌ (பெண்கள் மமபர்தாஸஹ என்றும், புருஷாள அஸ்மாகம் ஸஹகுடும்பாணாம் என்றும் சொல்லவேண்டி யது.) மமகேஹமஸ்தைர்ய விஜய ஆயுராரோக்ய ஐஸ் வர்யாப்பி விருத்யர்த்தம் த்தாமார்த்த காமமோக்ஷ சதுர் வித்த ப்பலபுருஷார்த்த லித்தயர்த்தம ஸத்ஸந்தான ஸகல சௌபாக்ய சுப்பப்பலாவாப்த்யர்த்தம இஷ்டகாம யார்த்த லித்யர்த்தம் வருஷே வருஷே ப்ரயுக்த ஸ்ரீகேதா ரேஸ்வர தேவதாமுத்திஸ்ய கேதாரே ஸ்வரதேவதா ப்ரீத் யர்த்தம் கல்போக்தப்ரகாரேண யாவச்சக்தி த்யானவாஹ நாதி ஷோடசோபசார பூஜாஞ்சகரிஷ்யே (நம:) ததங்கத் வேக கலசபூஜாஞ்சகரிஷ்யே (நம:) ததாதௌள கணேத்தி பதிபூஜாங்கரிஷ்யே (நம:) (கலசபூஜையும் கணபதிபூஜையும் செய்து பிரகு கேதாரேஸ்வரபூஜை ஆரம்பிக்கவேண்டியது. கலசம் அலங்கரித்து வைத்து கலசத்துக்கு பக்கத்தில் அமிக்குழவிக்கும் மஞ்சள் குங்குவம் சந்தனம் அகூஷதை யுடன் அலங்கரித்து பிரகுப்ராணப்ரதிஷ்டையும் லகுபூஜை யும் நடத்தினவுடனே தூபதீபமும் ஒருபழத்தை நிவேதன மும்செய்து கற்பூர தீபாராதனைசெய்து அதன்பிறகு கேதா ரேஸ்வரபூஜை ஆரம்பிக்கவேண்டியது. ப்ராணப்ரதிஷ்டை விஷயக விரதத்திலேயே எழுதியபடி மந்திரங்கள் சொல்லி சுவாமியின் பேர்மாத்திரம் மாற்றிசொல்லி பூஜைக்கி ஆரம் பம் செய்யவேண்டியது.) த்யானஸ்லோகம். சூலம் டமரு

கம்ஸைவ ததானம்ஹஸ்தயுக்மகே கேதாரதேவமீசானம் த்யாயே த்திரிபுரக்காதினம். கேதாரேஸ்வரஸ்வாமிந்ந மஃ த்யாயாமி. "சு" கைலாஸசிக்கரே ரம்யே பார்வத்யாஸஹி தப்ரப்போ ஆகச்சதேவதேவச மத்ப்பக்த்யாம் சந்தர சேக்கர. கேதாரேஸ்வ ரஸ்வாமிந்நமஃ ஆவாஹயாமி, 'சு' ஸ்ரஸ்ரகிரோரத்ந ப்ரதீபிதபதாம்புஜ கேதாரதேவமத் தத்த ஆஸனம்ப்ரதிக்ருஹ்யதாம் கேதாரேஸ்வர ஸ்....நமஃ ஆஸனம் ஸ....மி. "சு" கங்காத்தர நமஸ்தேதஸ்து த்ரிலோ சன வ்ருஷத்தவஜ மௌளக்திகாஸன ஸம்ஸ்தாப்ய கேதா ராய நமோநமஃ கேதா....ஸ்வாமியே நமஃ பாதயோஃ பாத் யம் ஸ....மி. "சு" அர்க்யம் க்ருஹாணப்பகவன் ப்பக்த்யா தத்தம் மஹேஸ்வர, பரயச்சமே மனஸ்துஷ்டிம் ப்பக்தா நாமிஷ்டதாயக. கேதா....நமஃ அர்க்யம் ஸ....மி "சு" மூநிப் பிர்நாரதப்ரக்யே நித்யமாக்யாத வைப்பவம், கேதாரதேவப் பகவன் க்ருஹாணசமநம்ப்ர்ப்போ. கேதா....நமஃ ஆசம நீயம் ஸ....மி. கேதாரதேவப்பகவன் ஸர்வலோகேஸ்வர ப்ரப்போ, மத்துபர்க்கம் ப்ரதாஸ்யாமி க்ருஹாணத்வம் சுப் போனவை கேதா....ஸ...நமஃ மத்துபர்கம் ஸ....மி. "சு" ஸ்நாநம் பஞ்சாம்ருதம்தேவ சீதசுத்தோதகைரபி, க்ரு ஹாண கௌரீரமண த்வத்ப்பக்தேன மயார்பிதம். கேதா ஸ்வா....நமஃ பஞ்சாம்ருதஸ்நாநமம் ஸ....மி. நதீஜலஸமா யுக்தம் மயாதத்தமனுத்தமம், ஸ்நாநம்ஸ்வீகுருதேவச ஸதாசிவ நமோஸ்துதே. கே....ஸ....நமஃ சுத்தோதகஸ்நா நம் ஸ....மி. "சு" வஸ்த்ரயுக்மம் ஸதாசுப்பரம் மஹேஸ்வர மிதம் சுப்பம் ததாமிதேவதேவச ப்பக்த்யேதம் ப்ரதிக்ரு ஹ்யதாம். கேதா....ஸ....நமஃ, வஸ்த்ரயுக்மம் ஸ....மி. "சு" ஸ்வர்ன எக்நோபவீதஞ்ச காஞ்சனம்சோத்தரீயகம். ருத் ராக்ஷமாலயாயுக்தம் ததாமிஸ்வீகுருப்ரப்போ. கேதா....

ஸ....நமஃ எக்ரோதபவீதம் ஸ....மி. "சு" ஸமஸ்த கத்ததீ ரவ்யாணும் தேவத்வமவிஜன்மப்பூஃ, ப்பக்த்யாஸமர்ப்பிதம் ப்ரீத்யா ம்யாகந்தாதிக்ருஹ்யதாம். கேதா....நமஃ ஸ்ரீகந் தான் ஸ....மி. "சு" அக்ஷதோதா வித்வப்பாவேவ ப்பக்தா நாம் அக்ஷதம் பதம், ததாவிநாத்த மத்தத்தைஃ அக்ஷதைஃ ப்ரியதாப்பவான். கேதா....நமஃ அக்ஷதான் ஸ....மி. "சு" கல்பவ்ருக்ஷ ப்ரஸூனைஸ்தவம் பூர்வைரப்பயர்சித ஸ்ஸு ரைஃ குங்குமைஃ பார்த்திவைரேப்பி ரிதாநீமர்ச்சதாம்மயா. கேதா....ஸ....நமஃ புஷ்பாணி பூஜயாமி. ததஃ இந்திராதி அஷ்டதிக்பாலபூஜாம் குர்யாத். இந்த்ராயநமஃ அக்னயே நமஃ எமாய நமஃ நிருருதயே நமஃ வருணயநமஃ வாயவேநமஃ குபேராயநமஃ ஈகாநாயநமஃ சிவஸ்யதக்ஷிணப்பாகே ப்ரம் ஹ்மணேநமஃ, உத்தரப்பாகே விஷ்ணவேநமஃ, மத்யே கேதா ரேஸ்வராய நமஃ.

அத்தாங்க பூஜா.

மஹேஸ்வராய நமஃ	பாதௌ பூஜயாமி.
ஈஸ்வராய	ஜங்கே பூ—மி
காமரூபாய	ஜானுநீ பூ—மி
ஹராய	ஊரூ பூ—மி
த்ரிபுராந்தகாய	குஹ்யம் பூ—மி
ப்பவாய	கடிம் பூ—மி
கங்காத்தரார்ய	நாப்பிம் பூ—மி
மஹாதேவாய	உதரம் பூ—மி
பசுபதயே	ஹ்ருதயம் பூ—மி
பிநாகிநே	ஹஸ்தான் பூ—மி
சிவாய	ப்புஜௌ பூ—மி
சிதிகண்ட்டாய	கண்ட்டம பூ—மி
விரூபாக்ஷாய	முக்கம் பூ—மி

த்ரிணேத்ராய
ருத்ராய
சர்வாய
சந்த்ரமௌளயே
பசுபதயே
நேத்ராணி பூ—மி
லலாடம் பூ—மி
சிர: பூ—மி
மௌளிம் பூ—மி
ஸர்வாண்யங்காணி பூ—மி.

சிவாஷ்டோத்ர சதநாமபூஜை செய்யவேண்டியது.

ஒவ்வொரு நாமத்திற்கும் முதலில் (ஓம்) எனவும் கடைசியில் (நமஃ) சேர்த்துக்கொண்டு பூஜை செய்யவேண்டியது.

ஓம் சிவாய நமஃ
மஹேஸ்வராய
சம்பவே
பிநாகிநே
சசிசேகராய
வாமதேவாய
விரூபாக்ஷாய
கபர்திநே
நீலலோஹிதாய
சங்கராய
சூலபாணயே
க்கட்வாங்கிநே
விஷ்ணுவல்லபாய
சிபிவிஷ்டாய
அம்பிகாநாத்தாய
ஸ்ரீ கண்ட்டாய
ப்பக்தவத்ஸலாய
ப்பவாய
சர்வாய
த்ரிலோகேசாய
சிதிகண்ட்டாய
சிவாப்ரியாய
உக்ராய
கபர்திநே
காமாரயே
அந்த்தகாஸுரஸூதநாய
கங்காத்தராய
லலாடாக்ஷாய
காலகாலாய
க்ருபாநித்தயே
ப்பீமாய
பரஹஸ்தாய
ம்ருகபாணயே
ஜட்டாத்தராய
கலாஸவாலிநே
கவசிநே
காடோராய
த்ரிபுராந்தாய
வ்ருஷாங்காய
வ்ருபபாரூட்டாய
ப்பஸ்மோத்தூளிதவிக்ரஹாய
ஸாமப்ரியாய
ஸ்வரமயாய
த்ரயீமூர்த்தயே
அநீஸ்வராய
ஸர்வக்ஞாய

பரமாத்மனே
ஸோமஸூர்யாக்னிலோசனாய நம:
ஹவிஷே
ஏக்ருமயாய
சோமாய
பஞ்சவக்த்ராய
ஸதாசிவாய
விஸ்வேஸ்வராய
வீரப்பத்ராய
கணநாத்தாய
ப்ரஜாபதயே
ஹிரண்யரேதஸே
துர்த்தர்ஷாய
கிரீசாய
கிரிசாய
அநக்காய
ப்புஜங்கப்பூஷணாய
ப்பர்காய
கிரித்தன்விநே
கிரிப்ரியாய
க்ருத்திவாஸஸே
புராராதயே
ப்பகவதே
ப்ரமத்தாத்திபாய
ம்ருத்யுஞ் ஜயாய
ஸூக்ஷ்மதநவே
ஜகத்வ்யாபினே
ஜகத்குரவே
வ்யோமகேசாய
மஹாஸேநஜனகாய
சாருவிக்ரமாய
ருத்ராய
ப்பூதபதயே
ஸ்தாணவே
அஹிர்புத்நியாய
திகம்பராய
அஷ்டமூர்த்தயே
அநேகாத்மனே
ஸாத்விகாய
சுத்தவிக்ரஹாய
சாஸ்வதாய
க்கண்டபரசவே
அஜாய
பாசவிமோசகாய
ம்ருடாய
பசுபதயே
தேவாய
மஹாதேவாய
அவ்யயாய
ஹரயே
ப்பகநேத்ரப்பிதே
அவ்யக்தாய
தக்ஷாத்வரஹராய
ஹராய
பூஷதந்தப்பிதே
அவ்யக்ராய
ஸஹஸ்ராக்ஷாய
ஸஹஸ்ரபதே
அபவர்கப்ரதாய
அனந்தாய
தாரகாய
பரமேஸ்வராய

(50) (60) (70) (80) (90) (100) (108)

ஸ்ரீ கேதாரேஸ்வர ஸ்வாமினே நம:
சிவாஸ்டோத்ர சதநாமபூஜாம் ஸமர்ப்பயாமி.

நோன்புக்கயற்கனை வைத்து ஸ்ரீசக்ரக்ரந்தி பூஜை செய்கிறது.

சிவாய நமஃ	ப்ரத்தமக்ரந்திம்	பூஜயாமி.	
சாந்தாய	த்விதீய	,,	பூ—மி
மஹாதேவாய	த்ருதீய	,,	பூ—மி
வ்ருஷப்பத்வஜாய	சதுர்த்த	,,	பூ—மி
கௌரீசாய	பஞ்சம	,,	பூ—மி
ருத்தராய	ஷஷ்ட	,,	பூ—மி
பசுபதயே	சப்தம	,,	பூ—மி
பசீமாய	அஷ்டம	,,	பூ—மி
த்ரியம்பகாய	நவம	,,	பூ—மி
நீலலோஹிதாய	தசம	,,	பூ—மி
ஹராய	ஏகாதச	,,	பூ—மி
ஸ்மரஹராய	த்வாதச	,,	பூ—மி
ப்ரர்காய	த்ரயோதச	,,	பூ—மி
சம்ப்பவே	சதுர்தச	,,	பூ—மி
சர்வாய	பஞ்சத	,,	பூ—மி
ஸதாசிவாய	ஷோடச	,,	பூ—மி
ஈஸ்வராய	சப்ததச	,,	பூ—மி
உக்ராய	அஷ்டாதச	,,	பூ—மி
ஸ்ரீகண்டாய	ஏகோநவிம்சதி		பூ—மி
நீலகண்ட்டாய	விம்சதி	,,	பூ—மி
ம்ருத்யுஞ்ஜயாய	ஏகவிம்சதி	,,	பூ—மி

த்தூபதீபனைவேத்திங்கள் செய்கிறது.

சு. தசாங்கம் த்தூபமுக்யஞ்ச ஹ்யங்கார விநிவேசிதம், த்தூபம் ஸுகந்தை ருத்பன்னம் த்வம்ப்ரீணயதுசங் கர|| கேதாரேஸ்வர ஸ்வாமிநே நமஃ த்தூப மாக்காராப யாமி.

சு. யோகிநாம் ஹ்ருதயேனைவ ஞான தீபாங் குரோத்விஷ, பாஹ்யதீபோ மயாதத்தோ க்ருஹ்யதாம் ப்பக்த கௌரவாத் || கேதாரேஸ்வர ஸ்வாமிநே நமஃ தீபம் தர்சயாமி.

சு. த்ரைலோக்யமபி நைவேத்யம் தேதத்ருப்தி ஸதா பஹிஃ நைவேத்யம் ப்பக்தவாத்ஸல்யாத் க்ருஹ்யதாம் த்ரியம்பகத்வயா || கேதாரேஸ்வர ஸ்வாமிநே நமஃ நாநாவித்த ப்பலானி பக்ஷ்யப்போஜ்ய நிவேதனம் நிவேதயாமி.

சு. நித்யாநந்த ஸ்வரூபஸ்தவம் யோகிஹ்ருத் கமலேஸ்திதம், க்ருஹாண ப்பக்த்யா மத்தத்தம் தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம் கேதாரேஸ்வர ஸ்வாமிநே நமஃ தாம்பூலம் ஸமர்ப்பயாமி

சு. அர்க்யம் க்ருஹாண ப்பகவன் ப்பக்த்யாதத்தம் மஹேஸ்வர, ப்ரயச்சமே மனஸ்துஷ்டிம் ப்பக்தாநாமிஷ்டதாயக. கேதாரேஸ்வர ஸ்வாமிநே நமஃ டுநரர்க்யம் ஸமர்ப்பயாமி.

சு. கர்பூர சந்தரஸம்காசம் ஜ்யோதி ஸ்ஸ்வரூப மிவோதிதம், ப்பக்த்யா தாஸ்யாமி கர்பூரம் நீராஜந மிதம்சிவ. கேதாரேஸ்வர ஸ்வாமிநே நமஃ கர்பூரநீராஜனம் தர்சயாமி.

சு. ப்பூதேச பபுவநாதீச ஸர்வதேவாதி பூஜித, பரதக்ஷிணம் கரோமித்வாம் ஹ்ரதம்மே ஸப்பலம்குரு கேதாரேஸ்வர ஸ்வாமிநே நமஃ ப்ரதக்ஷிணம் ஸமர்ப்பயாமி.

சு. ஹரசம்ப்போ மஹாதேவ விஸ்வேசாமர வல்லபப சிவசங்கர ஸர்வாத்மன் நீலகண்ட்ட நமோஸ்துதே.

சு. சாந்தம் பத்மாஸநஸ்தம் சசித்தரமகுடம் பஞ்சவக்த்ரம் த்ரிநேத்ரம், சூலம்வஜ்ரஞ்ச க்கட்கம் பரசுமப்பயதம், தக்ஷப்பாசே வஹ்நந்தம் நாகம்பாசஞ்ச க்கண்

டாம் ப்ரளய ஹரதவஹம் பார்வதீசம்நமாமி. கேதா
ரேஸ்வர ஸ்வாமிந நமஃ நமஸ்காரான் ஸமர்ப்பயாமி.

சு. அப்பீஷ்டவரித்திம் குருமே, சிவாவ்யய மநேஹஸ்வர
ப்பக்தாநாம் இஷ்டதாநார்த்தம், மூர்தீக்ருதகளேப
ரம் இதிப்ரார்த்தன. கேதார தேவதேவச ப்பக
வன் அம்பிகாபதே, ஏகவிம்சத் திநேதஸ்மின் ஸ்ரீத்
ரம் க்ருண்ஹாம்யஹம்ப்ரப்போ || ஸ்ரீத்ரக்ரஹணம் ||
நோன்பு தோரம் எடுத்துக்கொள்ளுகிறது.

அடியில்வருகிற மந்த்ர ஸ்லோகத்தால் நோன்புக்கயர் கட்டிக்கொள்ளுகிறது. அந்த தோரம் கட்டிக்கொள்பவர் புரோஹிதரிடங் கொடுத்து அக்ஷதையோடு ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு அல்லது பெரியோர்களின் ஆசீர்வதத் துடன் வாங்கிக்கொண்டு பழமாவது தேங்காய்முடியாவது கையில் வைத்துக்கொண்டு கட்டிக்கொள்ள வேண்டியது. ஒவ்வொருநோன்பிலும் இப்படி செய்வது நலம்.

சு. ஆயுஸ்ய வித்யாஞ்ச தத்தா ஸ்ரீக்கஞ்ச ஸௌபாக்
யவ்ருதிம் குருதேவதேவ, ஸம்ஸார க்லேசாராம்பு
நித்தௌ நிமக்னம் மாம்ரக்ஷ கேதார நமோநமஸ்தே.
தோரபந்தனம்.

சு. கேதார ப்ரதிக்ருண்ஹாது கேதாரோவை ததாதிச
கேதாரஸ்தாரகோ பாப்யாம் கேதாராய நமோநமஃ
உவாயநதானம்

சு. கேதரப்ரதிமா யஸ்மாத், ராஜ்ய ஸௌபாக்ய வர்த்
தநீ, தஸ்மாதஸ்ய பரதாநேந மமாஸதுஸீ ரசஞ்சலா.
இது ப்ரதிமைதானம் கொடுக்கிர மந்த்ரம்.

பூஜாவித்தி பூர்தியாயிற்று.

கதையைக் கேழ்க்கிறவர்கள் கையில் அக்ஷதையுடன் கேட்டு கடைசியில் அந்த அக்ஷதையை ஸ்வாமிமேல்போட்டு சேவிக்கவேண்டியது.

கேதாரவிரத கதை.

ஸ்ரீஸூத புராணிகர் நைமிசாரண்ய வாஸிகளாகிய, சௌநகாதி மஹரிஷிகளைநோக்கி, அடியிற்க்கண்ட விதம் சொல்லத்தொடங்கினர். ஓ இருஷிசிரேஷ்டர்களே உங் களுக்கு அனேகபுரா ணேதிஹாஸகதைகள் சொன்னேன். இன்னமொரு கதை சொல்லுகிறேன் கேளுங்கள். இந்த சராசரரூபமகமான ப்ரபஞ்ச கர்த்தாவாகிய, அந்த உமா மஹேஸ்வரரைக்குறித்து நமஸ்கரித்து ஸகல கல்யாண குணங்களுக்கும் காரணப்பூதமாகிய கேதாரவ்ரதமஹத்து வத்தை எடுத்துச்சொல்லுகிறேன் கேளுங்கள்.

உலகத்தில் மனுஷ்ய கோடிகளுக்கு சகலமான ஐஸ் வர்யத்தை கொடுக்கக்கூடியதும் அதன் மூலமாய் இஹபர ஸுகங்களை அடையக்கூடியதுமான லோகமாதாவாகிய உமயபார்வதியால் அனுஷ்டித்துச்செய்து சங்கரதேஹார்த் தமெனும் பரமசிவானுக்ரஹத்தால், அர்த்தநாரீஸ்வரி என்று பேர்பெற்றதான கேதாரீஸ்வர விரதமென ஒன் றுண்டு. அவ்விரதமாசரிக்கும் விதியை விவரித்துரைக்கும் படியாய் கேட்டுக்கொண்டபடியால் உங்களுக்கு விவரித்து சொல்லுகிறேன் கேளுங்கள்.

இந்த விரதத்தை (21) இருபத்தோருதடவை செய்யும் புண்ணியவான்களுக்கு இம்மையில் ஐஸ்வர்ய சுகமடைந்து மறுமையில் சிவஸாயுஜ்யம் அடைவார்கள் என்பது திண் ணம். ஆகையால் இதை ப்ராம்ஹணஸ்த்ரீ நாலுவர்ணஸ்த்ரீ களும் செய்யலாம்.

"ஓ முனிவர்களே" ப்பூலோகத்தில், ஈசான்யப்பாக த்தில் மின்னர்கொடிக் கூட்டங்களால் நிரைந்ததும் சரத்

காலமேகங்களுக் கொப்பாகியதும் அனேக நவரத்னமணி மயமான கோபுரசிக்கரங்களாலும் பலவித உத்யான வனங் களாலும், அதில் புஷ்பப்பலாதி விசேஷங்களாலும் பசுபக்ஷி ம்ருகாதிகளாலும மலையருவிகளாலும் சூழப்பட்டும் தேவ தா வ்ருக்ஷங்களாலும் ப்பலவ்ருக்ஷங்களாலும் மணமுள்ள புஷ்பச்செடிகளாலும கூடிப்ரகாசிக்கினற உத்யானவனங் களின் மத்தியில், விளங்கானின்றும், ஸர்வப்ராணிகளாலும் சேவித்து புகழ்ந்து பேசும்படியான மிகமங்களப்ரதமான கைலை என்று விளங்கும் ஒருபர்வத ஸ்ரேஷ்ட மொன் றுண்டு. அதில் மஹான்களும், யோகிகளும், சித்தாள், கின் னராள், கிம்புருஷாள், தேவ, கந்தர்வர்களால், ஸேவிக்கும் படியான, இப்பர்வசிகரத்தில், ஷட்குணஸ்வர்யஸபன்ன ரான ஜகத்கர்த்தாவாகிய பரமேஸ்வரர் உமாஸமேதராய் ப்ரமத்த கணங்களாலும் இன்னும் இந்திராதி தேவர்களா லும் இருஷி முனிக்கூட்டங்களாலும் சூழப்பட்டு விளங்கும் படியான காலத்தில் பஞ்சப்பூதங்களாலும் சூர்யாதி நவக் ரஹங்களாலும் நக்ஷத்ரராசிகளாலும் வசிஷ்டாதி மஹர்ஷி களாலும் ப்ராம்ஹ்மி முதலியஸப்தமாத்ருகளாலும் கணபதி யும், தேவஸேனாபதியும், அரம்பைமுதலிய தேவஸ்திரீ களும், சிவஸாயுஜ்யமடைந்திருக்கும் அனேக தேவருஷி கூட்டங்களாலும் சேவித்து பணிவிடைச் செய்கிரவர்களின் மத்தியில் ப்பவாநீஸமேதராய் எழுந்தருளி இருக்கும்படி யான பரமசிவன், தன்ப்பக்தகோடிகள் ஸுலபமாய் தங் களை தரிசிக்கும்பொருட்டு, ஒருதேவசபை ஏற்படுத்தி சிவ பெருமான் உத்திரவின்படி நாரதாதி தேவகாயகர்களால் மனேக்யமாய் தேவவாத்திய விசேஷங்களால் கானம் நடத் தும்போது, க்ருதாசி மேனகை முதலியோர்கள் வீணை தா ளவிசேஷங்களுடன் நான்குவித வாத்தியங்களோடும் நாட்டியம் செய்தார்கள். அப்போது நடந ஸ்திரீகளில்

மிகசௌந்தர்ய முள்ளவாளாகிய, எல்லாருடைய மனதைக் கவரக்கூடிய ரம்பையானவள், அனேகமான நாட்டிய விசேஷங்களை நடித்துக்காட்டினாள் உடனே பரமசிவ அந்த ரங்கப்பக்தராகிய ப்ருங்கிமஹர்ஷியாகிய சிவயோகி சிவஸன்னிதானத்தில் தத்பரதி நித்தியாக, ப்பக்தியோடு விசித்ரமான விகடநாட்டியமம செய்தார். அபோபாது பரமசிவனுடைய இடது பார்சத்தில், பார்வதியும எழுந்தருளியிருந்தாள். எல்லாதேவர்களும் அந்தப்ருங்கியால் செய்யப்பட்ட நாட்யங்களுக்கு மிகசந்தோஷித்து நகைத்து மிக ஆச்சரியமடைந்தார்கள். அந்த ஆனந்தமயமான சிரிப்பினல் பர்வதகுகைகள் நிரைந்து விஷமான கலகலத்வனி யுண்டாச்சுது அப்போபாது பரமசிவத்திற்குஉண்டானமனக்களிப்பால், அச்சிவப்பக்தனுகிய ப்ருங்கியைப்பார்த்து, உன்னல் நடத்திய நாட்டியவிசேஷத்தால் எனக்கு மிகசந்தோஷமுண்டாச்சுதென்று பரமசிவன்சொல்லி, அந்தப்பக்தரிடம் மிகக்ருபை உண்டாகி அனுக்கரஹம்செய்தார். அப்போபாது சபையிலுள்ள கவிவிபுத்தாள் முதலியவர்கள் அவரைமிக கௌரவப்படுத்தினர்கள். அம்மகரிஷி மிகப்பக்தியோடு அதிவணக்கதுடன் சந்தோஷமாய் பார்வதியைநீக்கி பரமசிவத்திற்கு மாத்திரம் வலம்சுத்திவந்து நமஸ்காரம்செய்தார். உடனே மிகபூஜ்ஜையான பார்வதீதேவி புன்சிரிப்போபாடு தன்பர்த்தாவாகிய பரமசிவத்தை கண்ணேணக்கி பார்த்து, "ஓ ஸ்வாமீ" இந்தப்பக்தன் எண்ணவிட்டு, தங்களுக்குமட்டும் நமஸ்காரித்தானே அதற்கு என்னகாரணமோ அந்த ஆச்சரியமான விஷயத்தை எனக்கு விவரித்துச்சொல்ல வேண்டுமென்று கேழ்க்க சந்தரசூடர் "ஓப்ரியே" சொல்லுகிறேன் கேள். சிவயோகிகளாகிய பரமார்த்தாபேக்ஷையை கோரினவர்கள் உன்னல் எவ்விதமான ப்ரயோஜனம கிடையாதென்கிற நிச்சய மனதுடன் என்னைமாத்திரம நமஸ்கரித்தாரென்று

பரமசிவன்சொல்ல உடனே பரமேஸ்வரி மிகவருத்தப் பட்டு தன்பர்தாவிடத்தில் கோபங்கொண்டு, அந்தபக்க ரிடத்திலுள்ள சக்தியை ஆகர்ஷணம் செய்துக்கொண்ட உடனே அப்பக்தன் சக்தியற்றவனாய் நின்றார். உடனே பரமேஸ்வரி தன்சக்தியால் ஆகர்ஷணம் செய்துக்கொண்டு ஓ இருஷியே என்கூராகிய ரக்தமாம்ஸாதிகளை நீர்வைத் திருக்கலாகாது என்றாள். அதைக்கேட்ட பிருங்கிமாரிஷி தன் உடலிலிருந்த ரக்தமாம்ஸத்தை உதரிவிட்ட உடனே அசக்தராய் நிற்கமுடியாமல் தவிக்கையில் பரமசிவன் தன் ப்பக்தனுடைய துயரத்தையாற்ற ஓர ஊன்றுகோலை அவர் கையில் தந்தார். உடனே பிருங்கிமாமுனிவர், பரமாநந்தத் தோடு அத்தண்டத்தை வூன்றிக்கொண்டு ஆனந்த பரவசத் தால் நர்த்தனம் செய்து தனதாஸ்ரமத்தை சேர்ந்தார். இதனல், பார்வதியானவள் மிககோபத்தினல் மனக்லேசத் துடன் வெட்கித்து கைலாயத்தை விட்டு பூலோகத்தை யடைந்து, மிக பயங்கரமான காட்டில் தவம்செய்ய புரப் பட்டு வருங்காலத்தில் கொடிய மிருகங்களாலும் ஸர்ப விசேஷங்களாலும், செடி கொடிகளாலும் நிறைந்திருக்கும் வனம் ப்ரவேசித்தாள். இவ்வித கடினமான வழியைக் கடந்துவரும் சமயத்தில் ஒரு முனிவரது ஆஸ்ரமத்திலுள்ள பூங்காவனத்தில் ப்ரவேசித்தாள். அந்த ஆஸ்ரமமானது கௌதமாஸ்ரமமென்று தெரிந்தது. அதையே சில க்ரந்தங் களில் (வால்மீகாஸ்ரமமென்றும் சொல்லியிருக்கிறது) அத் தேவியானவள் ஒருவ்ருக்ஷத்தடியில்எழுந்தருளியிருந்தாள். அந்த தேவியின் வருகையால் அப்பூங்காவனம் சிலவருட காலமாய்மழையில்லாமையால் அவ்விடத்திலுள்ளவ்ருக்ஷங் கள் செடிகள் கொடிகள் வாடியிருந்தது. அவையெல்லாம் துளிர்த்து, தழைத்து, பூத்துக்காய்த்து, பழுக்க ஆரம்பித் தது. மல்லிகை முல்லை, கொங்கு, இருவாட்சி, மந்தாரை,

